# பதிவிரதை

...சினிமா நவீனம்

''கே.ஸ்ரீ''



பேசும்




உத்திரவா ... வரங்களுக்கு

முத்... ...சட்டியார்
(மதற... கம்பெனி

88-89 சை... ...............மதறாஸ்.
தலைமை அ... .......திருப்பூர்.

...ராஜன்


10983

# பதிவிரதை

திருப்புகழ் அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

609-A/74

246

கே. ஸ்ரீ.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

**பேசும் படம் காரியாலயம்**

தியாகராயநகர் :: சென்னை

முதற் பதிப்பு : 1946
உரிமை பெற்றது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல்வரிசை எண்: 749
நன்கொடை எண்: 749

விலை ரூபாய் 1-8-0

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

சென்னை
ராமநாத் பிரஸில்
அச்சிடப்பட்டது

# தீர்ப்பு

அகல்யா, கர்ணனின் அன்னை குந்தி, ஆங்கில நாவலாசிரியர் தாமஸ் ஹார்டியின் அதி அற்புத சிருஷ்டி டெஸ், இவர்கள் யாவரும் பதிவிரதைகள் என்று காலம் தீர்ப்பு அளித்தால், இந் நவீனத்தில் வரும் மஞ்சுளா மகோன்னத பதிவிரதை, உத்தமி, பெண்தெய்வம் என்றே நான் வாதாடுவேன்.

புத்தகத்தைப் படித்துவிட்டு 'ஆம்' என்று நீங்கள் ஆமோதித்தால் அதுவே என் லக்ஷிய வெற்றி.

— கே. ஸ்ரீ.

அச்சிலிருக்கிறது :

கே. ஸ்ரீ. எழுதிய

1. ஸ்ரீமதி
2. ரேஷன் காலம்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

அவ்வை தி.க. சண்முகம்

# பதிவிரதை

அவள் அழகி.

ஒரு அசாதாரண எழில் அவள் கண்களில் ஜ்வலித்தது. அவள் ஸோபாவில் உட்கார்ந்துகொண்டு வானத்தில் சிதறிக் கிடக்கும் நக்ஷத்திரங்களை இமை கொட்டாமல் நோக்குவதே ஒரு சைத்ரீகனின் கலா உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போகும்படி இருந்தது.

அவளருகில் வீற்றிருந்த இருவரும் நீண்ட பெருமூச்சு விட்டு, அவளது கவனத்தை முற்றும் கவர்ந்திருந்த வானத்தைப் பார்த்தார்கள். மூலையில் வீசும் விளக்கின் ஒளி அறை முழுவதும் ஒரு மங்கலான வெளிச்சத்தை நிரப்பி, இருளுடன் மௌனப் போர் புரிந்துகொண்டிருந்தது.

மஞ்சுளா எழுந்தாள். ஜன்னலை அணுகினாள். வெளியே வீசிக்கொண்டிருக்கும் காற்று அவள் புடவை மீது பலமாக உராய்ந்து ஒரு புரிபடாத கீதத்தை எழுப்பியது. வானத்தைப் பார்த்த வண்ணம் அப்படியே ஜன்னல் மீது சாய்ந்துவிட்டாள் மஞ்சுளா.

"மஞ்சு!" என்று சந்துரு கூவியவுடன், ஜன்னலைவிட்டு அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு அவள் திரும்பினாள்.

அவள் தன் கண்களை அகல விரித்து தன்முன் வீற்றிருந்த தன் கணவன் கபாலியையும், அவன் நண்பன் சந்துருவையும் உற்று நோக்கினாள்.

ஒரு சினிமாப் படத்தைப் பார்த்துவிட்டு அப்போதுதான் திரும்பி வந்திருந்தனர் அந்த மூவரும். அது ஒரு தமிழ்ப் படம். சாயந்திர வேளையில் விளையாட்டாகப் பொழுது போக்கலாம் என்றே அவர்கள் சென்றார்கள். தினசரி வாழ்வில் அலுப்புத் தட்டி மனதுக்கு ஒரு மகிழ்ச்சி தேடியே அவர்கள் படத்தைப் பார்க்கச் சென்றார்கள். ஒரு இரண்டு மணி நேரத்தையாவது உல்லாசமாகப் பொழுது போக்கவே துணிந்து சென்றார்கள். பல வருஷங்களாக தமிழ்ப் படத்தையே பார்க்காததால், தமிழ்ப்படம் பேசும் பட உலகில் எத்தனை தூரம் முன்னேறி இருக்கிறது என்று தாங்களே நேர்முகமாக அறியச் சென்றார்கள். ஆனால் நேர்ந்தது என்ன? ஒரு விபத்து ஏற்பட்டிருந்தாலும் அவர்கள் மனம் அத்தனை அலங்கோலமாக உடைந்திருக்காது. உதிர்க்க முடியாத வெறுப்பு வேரூன்றி யிருக்காது. அவர்கள் நம்பிக்கைக்கு பங்கமும் நேர்ந்திருக்காது.

சாந்தியைத் தேடி சாகா சலிப்பை பெற்றபின் அவர்கள் உள்ளம் கொதிக்காமலிருக்குமா? படமும் முடிந்தது. மோட்டாரில் ஏறிக்கொண்டனர். வரும் வழியில் ஒருவராவது பேசவேண்டுமே! இல்லை. வண்டியை விட்டு இறங்கியபின், நேராக அறைக்கு வந்து ஸோபாவில் உட்கார்ந்து கொண்டனர்.

மௌன மகாநாடு துவங்கியது. அன்று தங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் எத்தனை நாழிகை

அவர்கள் சோகத்தில் சிலையாக மாறினர்கள் என் பதை அவர்கள் அறியவில்லை. பொறுமை யிழந்த மஞ்சுளா ஜன்னலுக்கும் ஸோபாவுக்கும் நடமாடிக் கொண்டிருந்தாள்.

சந்துரு கூப்பிட்ட பின்தான் அவளுக்கு சுய அறிவு மீண்டும் திரும்பியது.

"உலகம் கண்டு அதிசயிக்கும் தமிழ்ப் படம் ஒன்றை சிருஷ்டிக்கும் வரை நான் சும்மாயிரேன்!" என்று சந்துரு சபதம் செய்யவே, தம்பதிகள் திகைத்துப் போய்விட்டனர்.

"சந்துரு, வேண்டாம். இது வீண் பிரமை. இது நிறைவேறுவது மிகவும் கடினம். துர்லபம் என்று கூறினாலும் தவறாகாது" என்று கூறினன் கபாலி.

"கனவை நினைவாக்குவதிலேயே லக்ஷிய வெற்றி பூரிப்பை அடைகிறது."

"இது பூரிப்பல்ல."

"பின்னர்?"

"கானல் நீர்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் கவி.

சந்துருவின் கண்களில் ஒரு அசாதாரண ஒளி மின்னியது, இறுதியில் உறுதிக் கனல் உறைவிடம் கண்டு விட்டது போல். கள்வெறி உள்ளத்தில் கொழுந்துவிட, தன்முன் வீற்றிருக்கும் தம்பதிகளை இமை கொட்டாமல் கவனித்தான். அந்தப் பார்வையில் ஒரு அமானுஷ்யத் தீர்மானத்தின் சாயல் இலேசாகப் படர்ந்திருந்தது.

"கபாலி! மகா கவி நீயும், மகோன்னத மடந்தை மஞ்சுளாவும் எனக்கு நண்பர்களாக இருக்கும் வரை, அபஜயம் எனக்கில்லை."

"சந்துரு, கவிதை கனவிலேயே முடியும்."

"தவறு; முற்றும் தவறு. அந்தக் கவிக் கனவுகளை உணர்ச்சி மெருகிட்டு உண்மைத் திரையில் பதிய வைத்தால், அவை சாகா வரம் பெறும். அமரத்வம் அடையும். பல்லாயிர வருஷங்கள் பல்லாயிரம் கோடி மக்களை புளகாங்கிதப் படுத்தும்" என்று பரவசமாக மொழிந்தான் சந்துரு.

"நண்பா! பேசு; தட்டுத் தடங்கலின்றிப் பேசு. உன் வார்த்தைகளைக் கேட்டாவது மகிழ்ந்து போகிறேன்."

"கபாலி, நான் கூறுபவை பித்தனின் பிதற்றல் அல்ல. அது என் நெஞ்சாழத்திலிருந்து குமுறி எழும் உணர்ச்சிக் குரல். கபாலி, உன் கவிதா சௌந்தரியப் அர்த்த கௌரவம் பெற நான் செய்தால்?" என்று ஆவேசம் வந்தவன்போல் கேட்டான் சந்துரு.

"பகற் கனவுகளில் எனக்கு நம்பிக்கையில்லை" என்று புன்முறுவல் செய்தான் கவி.

"கபாலி! நீ மகா கவி. அமர கவி. உன் கவிதா பெருமையை உலகம் அறிய வேண்டும். உன் உள்ளத்திலிருந்து புனிதமான வெறியுடன் துளிர்த்த அந்த மகா காவிய நாடகம் — புயலுக்குப் பின் — கற்பனையின் மகாமேரு. அதை இன்று சூழ்ந்திருக்கும் சூழ்நிலை அறவே ஒழிய வேண்டும். மகா கவி நீ! நடனராணி மஞ்சுளா! உங்கள் இருவருடைய கலையும் நிரந்தரத்வம் பெற என் அபிலாஷை துடியாய் துடிக்கிறது. கபாலி! மனமிரங்கு. ஒரு வார்த்தை; ஒரே ஒரு வார்த்தை கூறு, போதும்" என்று மன்றாடினான் ரஸிகன் சந்துரு.

"சந்துரு! நீ சொல்வது ஒன்ருவது எனக்குப் புரிபடவில்லே. என் கவிதையும், மஞ்சுளாவின் நடனத் திறனும், உன் அபிலாஷை பூர்த்தியடைய எப்படி உதவும்?" என்று குழந்தைபோல் கேட்டான் கபாலி.

"கபாலி! நீ ஒத்துழைத்தால் மட்டும் நான் வெற்றி அடைய முடியும். நீ இஷ்டப்பட்டால்தான் என் சபதம் நிறைவேறும்" என்ற நண்பன் இழுக்கவே, கபாலி அவனே மென்மேலும் வற்புறுத்தினன்.

"என்னேத் தவருக நினைக்காதே. மஞ்சுளாவை நான் எடுக்கப்போகும் தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிக்க உத்திரவு கொடு. ஆறு மாசம். ஆறே மாசம்" என்று கெஞ்சினன் சந்துரு.

தீயை மிதித்தவன்போல் கபாலி துள்ளி எழுந்தான். மஞ்சுளாவைக் கவனித்தான். அவள் இடி ஒலி கேட்ட நாகம்போல் ஒடுங்கிப்போய் கிடந்தாள். அவன் மனக் கண்முன் ஒரு நொடியில் பல கோடி எண்ணங்கள் விஸ்வரூபம் எடுத்தன. தன் உயிருக்கும் மேலாகப் போற்றிவரும் மஞ்சு நாளே லக்ஷக் கணக்கான மக்களின் கூறிய பார்வைக்கும் நினைவு விகாரங்களுக்கும் ஆசைப் புரட்சிக்கும் பாத்திரமாக நிற்பாள் என்ற எண்ணம் மேலிடவே, அவன் உடல் பதறியது. அலங்கோலமாக நடுங்கியது. அணு அணுவாக அவள் அழகை ரஸித்த உரிமையை தமிழ் நாட்டு மக்கள் அனேவருடன் பங்கிடு செய்துகொள்ள வேண்டுமே என்று நினேக்கையில் அவன் இடிந்தே போய்விட்டான். 'மஞ்சு' என்று ஆசையுடன் தவழும் தன் குரலுக்கு எங்கு பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சினன். கவி உள்ளம் அல்லவா? ஆயிரம் கற்பனேகள் ஒருமிக்க

எழுந்தன. சிந்தனைகள் சிதறியவனாய், சோர்ந்து சாய்ந்து விட்டான் ஸோபாவில்.

சந்துரு எழுந்தான் கபாலியின் எண்ண விகாரத்தை புரிந்துகொள்ளப் போதுமான சக்தி அவனிடம் இல்லாமலில்லை. கபாலியின் அருகேயே உட்கார்ந்துகொண்டு, "நண்பா, நான் தாறுமாறாகக் கூறி உன் மனதைப் புண் படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சினான்.

"அப்படி ஒன்றுமில்லை சந்துரு! உன் விருப்பத்திற் கிசைந்தால், என் வாழ்க்கைப் பாதையில் விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என்றே யோசித்தேன்."

"விபரீதமா? எதற்கு?"

"இன்று அவை நேராமலிருக்கலாம்."

"நாளையும் எதற்காக நேரவேண்டும்?"

"அதுவும் நேராது என்றே நான் நம்புகிறேன் ஆனால் நாளை நடப்பதை நாம் அறியமுடியுமா?"

"என்ன நடந்தாலும், எந்தக் கொடிய ஆபத்து நம்மை பயமுறுத்தினாலும், அதன் பிடியினின்றும் விலக நம்மிடம் போதிய சக்தி இருக்கும்வரை நமக்குப் பயமேன்?"

"சந்துரு, நீ சொல்வதிலும் உண்மை யிருக்கிறது. மஞ்சுளாவை நான் நன்கறிவேன். அவள் உள்ளம் எந்த சோதனைத் தீயிலும் வெற்றியுடன் தேறும் என்ற நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு. ஆனால்................"

"நண்பா! இந்த 'ஆனால்' என்ற வார்த்தையை அடியோடு அழித்துவிட்டுப் பேசேன்."

"விதியின் நீரோட்டம் இந்த வார்த்தையில் தான் ஓடுகிறது. எதிர்பாராமல் சுழல் கட்டுவதும்

தினசரி வாழ்வின் நுணுக்கங்களில் தேக்கம் ஏற்படுத்தி நம்மை அதில் சொருகுவதும், அதன் ஆசை நிறைந்த திட்டம்" என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டே கூறினன் கபாலி.

"கபாலி! இது மட்டும் நிச்சயம். மஞ்சுளாவுக்கு இம்மி அளவும் துன்பமோ சலனமோ வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லையா?"

"இல்லாமலில்லை. ஆனல்........"

"வேண்டாம் அந்த 'ஆனல்'. அது என்னை முள்போல் தைக்கிறது."

"பலர் உள்ளத்தையும் அது முறித்து விடுகிறது."

"அதன் வலிமை எளியவரிடம் மட்டும்தான். உறுதி வேரூன்றிய உள்ளத்தை அதனல் அசைக்கவே முடியாது."

"புயலில் சிக்குண்ட மரம், எதிர்ப்பு வெறி கொண்ட கோலம்தான்."

"நாணல் புயலுக்கு அஞ்சுவதில்லை. நாணலை விட வலிது மனே உறுதி."

"சந்துரு, உன் நம்பிக்கை என்னை அயரச் செய்கிறது."

"நம்பிக்கை ஒன்றே உறுதியின் அஸ்திவாரம். அதன் உரைகல்கூட."

"அப்படியானல் நான் என்ன செய்யவேண்டும் என்கிருய்?"

"என் எண்ணத்தைத் தான் முன்னமேயே கூறிவிட்டேனே. கபாலி, நீ மறுப்பதற்கு ஒன்றுமே யில்லை. உன் நாடகத்தை படம்பிடித்துவிடு

கிறேன். அதன் கொந்தளிக்கும் உயரிய கருத்து களுக்கு மஞ்சுளா ஒருத்தியால் தான் உயிர் கொடுத்து நடித்துக் காட்ட முடியும். உனக்கு சந் தேகமே வேண்டாம். படத்தை நானே டைரக்ட் செய்கிறேன். எல்லாம் உன் எதிரில்.''

"சந்துரு, மஞ்சுளாவின் மனதை அறிய வேண்டாமா?''

"மஞ்சு, எங்களை மன்னித்துக் கொள். உன் னிடம் ஒரு வார்த்தை கூறுமலே, விளையாட்டுக் காயை நகர்த்துவதுபோல் நாங்கள் வாதாடிவிட் டோம். உன் இஷ்டம் எப்படி?'' என்று கேட் டான் சந்துரு.

கண்ணீர் தேங்கிக் கிடந்த தன் கண்களை, விர லால் துடைத்துக்கொண்டு, விண்ணை நோக்கினுள் மஞ்சுளா. வெகு தூரத்தில் பிரகாசிக்கும் நக்ஷத் திரம் ஒன்று அவளைக் கண் சிமிட்டி அழைப்பது போலிருந்தது. மறுகணம் வானம் இருண்டு, எல் லாத் திசைகளிலிருந்தும் பல குரல்கள் ஏகோபித்து எழுந்து ஏளனச் சிரிப்பு சிந்துவதுபோல் தோன்றி யது. அவள் உடல் பதறிற்று. மறுகணம் அவள் தன் கணவனை அணுகி அவன் மீது அப்படியே சாய்ந்துவிட்டாள்.

"மஞ்சு! என் செல்வமே!'' என்று தன் உட லுடன் பின்னிக் கொள்ளும் மனைவியைக் கொஞ்சி அழைத்தான் கவி.

கண்களை அகல விரித்து, குழந்தைபோல் தோன்றினுள் மஞ்சு.

"சந்துரு! வேண்டாம்; மஞ்சுவும் நானும் கவலையின்றி வாழ்ந்து வருகிறோம். காதல் ஸ்வர்க் கத்தில் இரு பக்ஷிகளென இன்றுவரை வாழ்ந்து

விட்டோம். அந்த இன்பம் நீடிக்கட்டும். அந்த இன்பம் நாளுகத் தேடி அழைத்த துன்பப் பாறையில் மோதுண்டு வீணுகச் சிதற வேண்டாம். பிடிவாதம் செய்யாதே சந்துரு. நானே கவி. அவளோ என் கவிதையில் பித்துக்கொண்டு என்னை தன் தெய்வமாகப் போற்றி வருகிருள். வீணுக எங்கள் அன்பிற்குச் சலனம் வேண்டாம். அது காட்டாறு போல் பாய்ந்து செல்லட்டும். அதன் வெள்ளத்தைத் தேக்கி, உலகத்துக்குப் பயன்பட முயற்சிப்பது, எங்கள் துன்பத்தில் முடியவேண்டாம். நண்பா, எங்களைத் தனியே விட்டுவிடு'' என்று மன்ருடினுன் கபாலி.

"அப்படியானுல், உங்கள் இன்பத்திற்கு பங்கம் தேடுபவன் நான்தானு?'' என்று சற்று கடிந்து கொண்டு கேட்டான் சந்துரு.

"ஐயோ! நான் அப்படிக் கூறவில்லை. உன் திட்டம் அதைத் தேடுமோ என்றே அஞ்சுகிறேன்.''

"கபாலி! உன் கவிதை ஒரு காலத்தில் எல்லோரையும் பிரமிக்க வைக்கப் போவதுமின்றி, அதை வருங்காலம் கைகுவித்துப் போற்றும் என்று பரிபூரணமாக நான் நம்புகிறேன். மஞ்சுளா உத்தமி. பெண்களின் திலகம். பெண் தெய்வம் அவள். அவளுக்கு யாதொரு சோதனையும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். இது சத்தியம்; சத்தியம்'' என்று அலறிவிட்டான் சந்துரு.

அவன் பிரதிக்ஞை அவர்களை உலுக்கியது. ஆவலுடன் அவனை நோக்கினுர்கள் அவர்கள் இருவரும்.

"கபாலி! நான் கலைமீது கொண்டுள்ள ஆவேச வெறியை நீங்கள் நன்கு அறிவீர்கள். சினிமாக் கலை இன்று படுகுழியில் புதைந்து மறைந்துவிடும்

பயங்கரத் தருணத்தில் இருக்கிறது. அதற்கு உயிர் ஊட்டவேண்டும்; சாகா வரம் அளிக்கவேண்டும்; அதன் அலங்கோல ஜீவனுக்கு ஒரு சவுக்கடி; அதன் கலா உயிருக்கே ஒரு புது மெருகு; இதுவே என் அபிலாஷையின் துடிப்பு. உன் அதி அற்புத கதையும், மஞ்சுவின் மகோன்னத நடிப்பும் எனக்கு உதவுமானால், உலகம் கண்டிராத கேட்டிராத அதி சயத்தைத் திரையில் சமைத்துவிடுவேன். கபாலி, இதுதான் என் கடைசி வார்த்தை. உன் சந்தேகம் நீடிக்கவேண்டும்; அல்லது என் கலைக் கனவு அடி யோடு மடியவேண்டும்" என்று கைகளை உதறிக் கொண்டு பதறினான் சந்துரு.

கவியின் கண்கள் கலங்கின. முகத்தோடு முக மாய் வைத்துக் கொண்டிருக்கும் மஞ்சுளாவின் கன் னத்திலும் அவன் கண்ணீர் நெருப்போடை போல் ஓடியது.

"தங்களுக்கு இஷ்டமானால் நான் சம்மதிக்கி றேன்" என்ற அவளது மெல்லிய குரல் மல்லிகை மொட்டென மலர்ந்தது.

நண்பனின் உறுதிக் கனலும், ஆவேச லக்ஷி யத்தின் தாபமும் கவியின் மனதைக் கலக்கின. மார்பில் படர்ந்து கிடக்கும் மஞ்சுளாவை அவன் பார்த்த வண்ணமிருந்தான். அவன் விரல்கள் அவள் கூந்தலைக் கோதின.

"கபாலி! இன்னமுமா தாமதம்? என்னிடம், என் கலைத் தொண்டின் மீது, உனக்கு நம்பிக்கை இல்லையா? கபாலி, மஞ்சுளாவை நான் என் சகோதரிக்கு மேலாக பாவித்து வருகிறேன். அவ ளும் என் மீது கட்டு மீறிய பாசம் கொண்டிருக்

கிருள். அவள் கலை ஒரு ஆனந்த ஒளி வீசவும், அதன் ஜாஜ்வல்யத்துக்கு உன் கதையும் என் திற னும் உதவ வேண்டுமென்றே நான் இந்தத் துறை யில் தீவிரமாக மனம் துணிந்து இறங்குகிறேன். நமக்கு அபஜயம் இல்லை; என்றும் இல்லை. கலை இருந்தால் அதற்கு ஆதரவு இல்லை. அந்த ஆதரவு இருந்தால் போதிய திறனில்லை. இவை யாவும் நம் மிடம் இன்று அமோகமாக அடைக்கலம் புகுந்தி ருக்கின்றன. லக்ஷிய வெற்றியைத் தடையின்றி பெறவே நான் இன்று தவியாய் தவிக்கிறேன். கபாலி, மறுக்காதே. உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. இது மட்டும் நிச்சயம்: என்மீது ஆணை. மஞ்சுவுக்கு தீங்கு நேராமல் நான் பார்த்துக் கொள் கிறேன். அப்படி அது எதிர்பாராத விதமாக விளைந்தாலும், அவள் கற்புக்கு யாதொரு பங்கமும் ஏற்படாமல் நான் கவனித்துக் கொள்கிறேன். இது சத்தியம், சத்தியம்'' என்று அடித்துக் கூறினன் சந்துரு.

இந்த வார்த்தைகள் சண்டமாருதமென கபாலி யைத் தாக்கின. மஞ்சுளாவை தன் இரு கரங்க ளால் தழுவிக் கொண்டே, "மஞ்சு, சந்துருவின் இஷ்டம் நிறைவேறட்டும்'' என்று உருக்கமாகக் கூறினன்.

மஞ்சு மறுகணம் அவன் மார்பில் தன் முகத் தைப் புதைத்துக்கொண்டு மெய் மறந்தவள்போல் கிடந்தாள். கவி உள்ளம் அவள் கற்பனைச் செவி களில் என்ன சோகக் குரலை நிரப்பியதோ!

பலநாள் பழகிய ஸர்க்கஸ்காரன் போல், சந்துரு பரவசமாகக் குதித்து அங்குமிங்கும் ஓடினன். தன் உள்ளம் ஏங்கி ஏங்கி சித்தரித்த கலைக் கனவு, அந்த நொடியிலேயே அமர சித்தி அடைந்து விட்டது

போல்! காதலர்களின் உறுதி கலேந்துவிடுமோ என்ற பயத்தினல்தாளுே என்னமோ, "கபாலி, நீயே உத்தம நண்பன். என் வேலையை இன்றே துவக்குகிறேன். நாளை உன்னை வந்து சந்திக்கிறேன். கபாலி, கவலையை ஒழி. கவலையும் நீயும் ஜன்ம சத்துருவாக மாறிவிடுங்கள். இதுவே என் பிரார்த்தனை. நான் நிச்சயம் வெற்றி அடைந்தே திருவேன். நாளைக்குக் கட்டாயம் வருகிறேன். ஞாபகம் இருக்கட்டும்" என்று கூறி படிக்கட்டில் இறங்கி மறைந்து விட்டான்.

மஞ்சுளா கபாலியை நோக்கினள். கவிதைக் கடலில் புயல் வீசியது!

# 2

“கதையும் கற்பனையும் மாத்திரம் கை கோர்த்துக் கொண்டு பரிமளித்தால் அமரத்வம் அரும்பி விடாது. அது ஒரு அசாதாரணப் பிறவி. மகா கவிகள் மெய் சிலிர்த்து அனுபவிக்கும் அமானுஷ்ய வேளைகளில் பலாத்காரமாகப் பிறந்து விடுகிறது” என்று மோஹன் கூறியதும், மஞ்சுளா உண்மையாகவே பூரித்துப் போய்விட்டாள்.

“மஞ்சுளா! நான் பெருமைக்குச் சொல்ல வரவில்லை. உன் கணவன் கபாலி நிரந்தரக் கவி. வாழ்க்கைக் கவி. தினசரி வாழ்வில் அலைமோதும் சிக்கலான மனோ தேக்கங்களுக்கு தன் கவிதாவேகத்தால் உயிர் கொடுப்பான். நான் பொய் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். அவன் எழுதியிருக்கும் அதி அற்புத நாடகம் ‘புயலுக்குப் பின்’ என்றென்றும் உலகில் உலவி வரும். அது நாடகம் மட்டுமல்ல. கலைஞனின் காவிய பிருந்தாவனம். ரஸிகனின் உல்லாசச் சோலை. எத்தனை முறை சுற்றிச் சுற்றி வந்தாலும் புதுப்புது உணர்ச்சிகளுக்கு மெருகு தீட்டி உள்ளத்தில் தோன்றும் மந்தகாசத்தை உயரிய பீடத்திற்கு எழுப்பிக் கொண்டே இருக்கும். மஞ்சு, நீயே பாக்யவதி” என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

தேனுண்ட வண்டு, மலர் மெத்தையில் மெய் மறந்து உறங்கும் நிலைமை மஞ்சுளாவுக்கு ஏற்பட்டது. அவன் கூறிய வார்த்தைகளின் பரவசத்தில் அப்படியே ஸோபாவில் சாய்ந்துவிட்டாள்.

மோஹன் நடிப்புக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றவன். எம்.ஏ. பட்டதாரி. முகத்தில் வசீகரம்; பார்வையில் குளுமை; பொருக்கி எடுத்து வைக்கப் பட்டது போன்ற மூக்கு; உதட்டில் மலர்ந்த புன்னகை; கன்னத்தின் குழியில் புதைந்து மறையும்

தோற்றம்; இவை யாவும் அவனது இயற்கை அழகுக்கு ஒரு புதுமெருகு தீட்டிய வண்ணம் இருந்தன. அவனுடன் சிறிது நேரமாவது பேசிப் பொழுது போக்க மாட்டோமா என்றே பெண் உள்ளம் ஏங்கும். ஆனால், அவன் கவனத்தை முழுவதும் மஞ்சுளா கவர்ந்துவிட்டாள்.

படமாகத் திகழப் போகும் 'புயலுக்குப் பின்' என்ற நாடகத்திற்கு கதாநாயகனாக சந்துருவால் தேர்ந்தெடுக்கப்பட்டான் மோஹன். நல்ல முக வெட்டும், வெடுக் வெடுக்கென்ற பேச்சும், அந்தப் பேச்சில் தூய தெளிவும், எல்லாவற்றிற்கும் மேலாக மோஹனின் கலா உணர்ச்சியும், டைரக்டர் சந்துருவின் உள்ளத்தை இலகுவில் கவர்ந்து விட்டன. மஞ்சுளாவும் சமூகப் பெண்ணானதால், அவள் அவனுடன் லஜ்ஜையின்றிப் பழக ஆரம்பித்தாள். வாழ்க்கையின் அன்றாடத் தருணங்களுக்கு சமய சந்தர்ப்பம் அறிந்து நடந்து வருகிறாளே என்ற பெருமை கவி கபாலிக்கு. தன் மனைவி எல்லோருடனும் பழகி நல்ல பெயர் எடுத்து வருவதிலும் அவனுக்குத் தனிப் பெருமை தான். தவிர, சதா கவிதா வேட்டையிலே லயித்துக் கிடக்கும் அவன் இச் சின்னஞ் சிறு சம்பவங்களை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. பேனாவைக் கையில் எடுத்துவிட்டால் போதும்; அதில் சிறைப்பட்டுக் கிடக்கும் மை கவிதையாக காகிதத்தில் சிதறிய வண்ணமாயிருக்கும்.

நெடுநேரமாகியும் மஞ்சுளாவின் மௌனம் கலையாமலிருப்பதைக் கண்டு கலவரம் அடைந்தான் மோஹன். அவள் கவனத்தைச் சற்று தன் புறம் இழுக்க எத்தனித்து, கையிலிருக்கும் புத்தகத்தை வேண்டுமென்றே கீழே போடவே, மஞ்சுளா தூக்கி

வாரிப் போட்டதுபோல் எழுந்து, "மோஹன்" என்று மிரண்டு கூறினள்.

"மன்னிக்கவும்!" என்று ஒன்றும் அறியாதவன்போல் கூறிவிட்டு, "உனக்கு சோர்வாக இருந்தால் அப்புறம் வந்து காண்கிறேன்" என்று எழுந்து செல்வதுபோல் பாசாங்கு செய்யவே, மஞ்சு அவன் கரங்களை இலேசாகப் பற்றிக்கொண்டு "வேண்டாம் உட்காருங்கள்" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அவள் ஸ்பரிசம் அவனை முதன் முதலில் திகைக்கத் தான் வைத்தது. தவிர அவளுடைய பூப்போன்ற விரல்கள் தன் கை மேல் பதிந்து இருப்பதைக் கண்டு அவைகளை அப்புறப் படுத்துவதா அல்லது தானுகவே தன் கையை விலக்கிக் கொள்வதா என்ற பெரிய யோசனை தாக்கியது. முரட்டுத் தனமாகக் கையை விலக்கிக்கொண்டு விட்டால், அவள் விரல்களை விட மிருதுவான அவளது பட்டு உள்ளம் துவண்டு விடுமோ என்ற பீதியில், அவனும் அயர்ந்து சும்மாயிருந்து விட்டான்.

தோட்டத்திலிருந்து எழுந்த காற்று சற்று வேகமாக வீசவே, மஞ்சுளாவின் பட்டு புடவை காற்றில் சிறகடித்துக் கொண்டு அவனை மூட எத்தனிப்பது போல் பறந்தது. சுய உணர்வு மீண்டும் பெற்றவளாய் மஞ்சுளா சற்று அப்புறம் நகர்ந்து உட்கார்ந்தாள்.

தாமதம் ஏற்பட்டால் அவள் மனதில் ஏதாவது விபரீத எண்ணம் ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில், "மஞ்சுளா! நாம் நடிக்கப் போகும் பாகம் மிகவும் கடினமானது. நாடகத்தில் வரும் கதாநாயகன் தன்னை அண்டி வந்திருக்கும் பெண்ணைக் காதலிக்கவில்லை. ஆனல் அவளோ, ப்ரேமையில் துடித்து

அவனை எவ்விதமாக வெல்ல வேண்டும் என்ற முடிவான தீர்மானத்துடன் அரும்பாடு படுகிறாள். தவிர அவளை எப்படியாவது மணந்து கொள்ளத் தவிக்கும் அந்நாட்டு சேனாதிபதி அவள் மனதைக் கலைக்கப் பார்க்கிறான் இதை அறிந்த பின்னரே, கதாநாயகன் விஜயனின் மனம் மாறுகிறது. இறுதியில் காஞ்சனா வெற்றி அடைகிறாள்" என்று ஆரம்பித்தான் மோஹன்.

"என் கணவர் நாடகத்தில் காட்டி யிருக்கும் உணர்ச்சி அத்தனையையும் எப்படி நடித்துக் காண்பிப்பது என்றே கலங்குகிறேன்" என்று அவள் பரிதாபகரமாகக் கூறினாள்.

"நடிப்பின் இரகசியம் இது தான். நம்மை மறந்து விடவேண்டும். நீ உண்மையாகவே காஞ்சனாவாக மாறி விட்டாலன்றி, கதாநாயகியின் பாகத்தை தத்ரூபமாகப் படத்தில் கொண்டு வருவது கடினம்."

"அப்படியானால் விஜயனை வெல்ல காஞ்சனா ப்ரேமையில் உருக வேண்டுமா?"

"திரையில் மட்டும்; வாழ்க்கையில் இல்லை."

"என் மனம் ஏன் பதறுகிறது என்று தெரியவில்லையே."

"எல்லாம் வெற்றி அடையத்தான்."

"என்ன சொன்னீர்!" என்று மிதிபட்ட நாகம் போல் சீறிக் கேட்டாள்.

"படத்தில் தான்."

"ஆம்; லக்ஷியவெற்றி அடையவே நானும் மனம் துணிந்து இதற்கு இணங்கினேன்."

"மஞ்சு! இதில் தவறு என்ன இருக்கிறது? நம் இருவர் மனமும் ஒன்றுபட்டு நடித்துக் காண்பித்து

நாம் எங்கும் வெற்றி அடைந்து விட்டால் அது நம் வெற்றி மட்டுமல்ல; தமிழ்ப் படத்தின் சாபக் கேடு அந்த மகத்தான தருணத்துடன் நீங்கும். மடியும் கலை உயிர் பெறும்.''

"லக்ஷக்கணக்கான மக்கள் மகிழ நாம் இருவரும் எப்படி எப்படி யெல்லாம் நம் எண்ணங்களைத் திருத்திக் கொள்ள வேண்டி யிருக்கிறது?''

"இது உன் சேவையல்ல, தியாகம்'' என்று அவன் கூறியவுடன், ஞானோதயம் பெற்றவள் போல் அவனை உற்று நோக்கினாள். பரவசத்துடன் அவன் கைகளையும் குலுக்கினாள்.

"நேரமாகி விட்டது என்றே நினைக்கிறேன். உன்னை நான் அப்புறம் எங்கே காணலாம்?''

"தாங்கள் எங்கே சந்திக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களோ அதே இடத்தில் தான்.''

"மஞ்சு! அப்படியானால் ஒன்று செய். நாளை இரவு எட்டு மணிக்கு நீ என் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் பேசி விட்டுத் திரும்பினால்?'' என்றான்.

"நாளை இரவா? சந்துருவும் அவரும் ஏதோ சினிமாவுக்குப் போக வேண்டும் என்று பேசி கொண்டிருந்தார்கள்.''

"பேஷாகப் போயிற்று. உனக்கு உடம்பு சரியில்லை என்று கூறிப் பேசாமல் வீட்டில் தங்கிவிடு. அவர்கள் போனவுடன் காரைப் போட்டுக்கொண்டு நீ இங்கு வந்து விடலாம்.''

"திரும்ப நேரமாகி விட்டால்?''

"என்னிடம் அத்தனை நம்பிக்கையில்லையா?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டவுடன் அவள் மனம் இளகிவிட்டது.



காமராசர் பல்...

"மஞ்சு, உன்னுடன் தனித்து நம் நடிப்பைப் பற்றிப் பேசவேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. உன்னுடைய ஒத்துழைப்பை நான் பெற்றுவிட்டால் ........" என்று அவன் இழுத்தாற் போல் கூறவே, "நாளை இரவு எட்டு மணிக்கு" என்று கூறி எழுந்தாள்.

"மறக்கவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே மோட்டாரை அணுகினான் மோஹன்.

மோட்டார்கார் வேகமாய் போகப் போக மோஹனின் எண்ணச் சுழல் அவனை ஆழம் காண முடியாத ஆவேசத் திசைக்கு இழுத்துச் சென்றது. கல்லூரியில் அவன் படித்துவந்த போதெல்லாம் அவனது வசீகரத் தோற்றம் அவனை பல சந்தர்ப்பங்களில் திக்கு முக்காடச் செய்து வைத்திருக்கிறது. சாதாரணக் கல்லூரி மாணவனாக அவன் இருந்திருந்தால், அவன் தானுண்டு தன் படிப்பு உண்டு என்று தன் காலத்தைக் கழித்து வந்திருக்கலாம். ஆனால், அவனது கவர்ச்சி பொருந்திய தோற்றம் அவனருகே அவன் விரும்பா வண்ணம் பல மாணவிகளை, அழகிகளை, ஆகர்ஷித்திருக்கிறது. முதன் முதலில் தோன்றி அவனை சற்று சங்கடப் படுத்தி வந்த லஜ்ஜையும் நாளடைவில் அவனிடமிருந்து இலேசாக விலகியதுமின்றி, அடியோடு மறையத் துடித்து நின்றது என்று கூறினாலும் மிகையாகாது. இறுதியில் அவனுக்கு மாணவர்களுடன் இரண்டு நிமிஷங்கள் நின்று பேசுவதென்றாலே கசப்பாக மாறிவிட்டது. தன் மன மாற்றத்தை அறிந்த அவன் நண்பர்கள் அவனை ஏளனம் செய்வதையும் அவன் சற்றேனும் பொருட்படுத்தவில்லை. பெண்களுடன் பேசாமல் ஒருநாளைக் கழிப்பதும் அவனுக்குக் கடினமாகிவிட்டது.

எத்தனையோ அழகிகளை மோஹன் தன் கல்லூரி நாட்களில் சந்தித்துப் பழகியிருந்தும், மஞ்சுவைப்போன்ற மடந்தையை அவன் காணும் சந்தர்ப்பம் ஏற்படவேயில்லை. அழகின் ஆதர்சம் அவள் என்றே அவன் மனம் முடிவு கட்டியது. அவளைப் பார்க்கும் தோறும், ஒரு அமானுஷ்ய உணர்ச்சி அவன் மனதில் ஊசலாடும். தவிர, அவன் நல்ல கலைப் பண்புடையவன் ஆனதால், அந்த உணர்ச்சி நாளுக்குநாள் வலுத்து ஒரு புரிபடாத விகாரத்தின் சாயலையும் பிரதிபிம்பிக்கத் தொடங்கியது. அவனும் தன்னாலான வரை, அந்த உணர்ச்சி அவனிடம் மேலோங்காமல் இருப்பதற்குப் பெருமுயற்சிகள் எடுக்கவும் தவறவில்லை. ஆனால் எல்லாம் வியர்த்தமாயின. முடிவு கட்டிக்கொண்ட தீர்மானங்கள் அவன் முன் காற்றாகப் பறந்தோடின. நல்ல பெயர் பெறவேண்டுமென்றே அவன் உள்ளம் ஏங்கியது. ஆனால் அவன் உறுதி மஞ்சுவின் முன் இப்படி இளகிக் கரைந்து போகும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. பெண்மையின் தாபம் அவனை மெல்ல மெல்ல கலக்கத்தின் சாரலில் உருட்டி விட்டு விட்டது. முடிவே தென்படாத பாதாளத்தில் பிரயாணம் செய்கிறோம் என்றவன் உள்ளம் பதறின வேளைகள் ஒன்றிரண்டல்ல; ஆயிரம் ஆயிரம்!

தன் பங்களாவை அடைந்தான். நாளை இரவு எட்டு மணிக்கு மஞ்சுளா இங்கு வரப்போகிறாள் என்று எண்ணும் போது அவன் பெருமிதமே அடைந்தான். அதை நினைக்கும் போதெல்லாம் அவனுக்கு மயிர்க் கூச்சல் எடுக்கத் தொடங்கியது. மகா அழகியான மஞ்சுளா உள்ளத்தில் களங்கமின்றி அவன் பங்களாவுக்கு வருவாள். அவன் செய்யும் அனந்தகோடி உபசாரங்களை வெறுப்பின்றி வர

வேற்பாள். இரண்டுமணி நேரம் தனியாக அவளுடன் சம்பாஷிக்கலாம். அவளும் தன் வெள்ளை மனதில் உள்ள உணர்ச்சிகள் அனைத்தையும் யாதொரு தேக்கமுமின்றி வெளியிடுவாள். தன் வாழ்க்கையின் சிகரம் இன்னும் இருபத்திநான்கு மணிநேரத்தில் தென்படும் என்றவன் எண்ணி எண்ணிப் பூரித்துப் போனான். அங்குமிங்கும் நோக்கமின்றி அலைந்தான். நக்ஷத்திரங்கள் என்றால் மஞ்சுவுக்கு உயிர். கவியின் காதலியல்லவா? ஜன்னலை எல்லாம் திறந்து வைக்கலாம். சீ, எதற்கு அந்த வர்ணத்துணி! தூய்மை உள்ளத்துக்கும் பசும்பொன் தானத்துக்கும் இடையே ஏன் அவை குறுக்கிட்டு நிற்க வேண்டும்? மஞ்சுவுக்கு ஆரஞ்சு என்றால் ரொம்பப் பிடிக்கும். தன் வேலையாள் முருகனைக் கூப்பிட்டு பொறுக்கி எடுக்கப்பட்ட சாத்தூர் ஆரஞ்சு ஒரு டஜன் உடனே தேவை என்று உத்திரவுபோட்டான். மஞ்சுவுக்கு நீல நிறத்தின் மீது ஒரு அலாதியான ப்ரேமை. அதனால் தன் வசமிருக்கும் நீல நிறத்துணிகள் அவ்வளவையும் எடுத்தான். மேஜை மீதும், ஸோபாமீதும், ஜன்னல்மீதும் அந்த அறை முழுவதையும் நீல நிறத்தால் நிரப்பினான். தன் படுக்கை உள்ளில் இருக்கும் நீல எலெக்ட்ரிக் பல்பையும் கொண்டு வந்து அந்த அறையில் மாட்டினான். சர்வம் நீல மயம் ஜகத் என்று அவன் உள்ளம் ஜபித்தது. காணும் செடி கொடிகள் எல்லாம் நீல வர்ணமாக மாறக்கூடாதா என்று கூட ஏங்கியது.

இந்த சௌந்தரிய போதையில் அவன் மனம் திக்குத் தெரியாமல் அலைந்து கொண்டிருக்கையில், எதிர்பாராத விதமாக அதிர்ச்சி பெற்றவன் போல் அவன் ஒரு கணம் பிரமித்து நின்றான். அவள் அழகி. அவன் நடிக்கப்போகும் திரைக் கதையின்

பிரதம நடிகை. ஆனல் அவள் கவியின் மனைவி, ஒரு உண்மைக் கலைஞனின் பத்தினி என்று எண்ணும் போது தீயை மிதித்தவன் போல் அவன் உடல் பதறியது.

மறுநிமிடமே ஒரு நீண்ட சூழ்நிலை அவனை இறுகப் பற்றிக்கொண்டது.

# 3

"இத்தனை தடபுடலாக என்னை வரவேற்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று கூறியவண்ணம் மஞ்சுளா ஸோபாவில் சாய்ந்தாள்.

மோஹனுக்கு அந்த வார்த்தைகள் போதை ஊட்டுவது போலிருந்தன. புன்முறுவல் பூத்தான். புளகாங்கித மடைந்தவனாய், தன்னையே மறந்து அவன் அவள் முன் சின்னஞ்சிறு பாலன் போல் தன் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றான். அவனைக் கண்டு பரிதாபம் மேலிட்டதினால்தானோ என்னவோ, மஞ்சு அவனை அன்பு குழைய நோக்கி, "ஏன் கால் வலிக்க நிற்கிறீர்கள்?" என்று அமுதம் சிந்துவது போல் கூறினாள்.

"உன் உள்ளம் நோக நான் நிற்கமாட்டேன்" என்றவன் கூறிவிட்டு அவள் அருகில் உட்கார்ந்தான்.

மஞ்சுளா சற்று சிரமபரிகாரம் செய்து கொள்வது போல தன் கண்களை மூடிக்கொண்டாள். கண்ணைத் திறந்து பார்த்ததும் தனக்கும் அவனுக்கும் அதிக இடைவெளி விட ஆவல் இல்லாதவன் போல் மோஹன் ரொம்பவும் நெருங்கி உட்கார்ந்திருந்தான். வியப்பும் திகிலும் கலந்த பார்வையுடன் அவனை உற்று நோக்கினாள்.

மோஹனின் கண்கள் இருள்வானில் சுடர்விட்டெரியும் இரு பந்தங்கள் போல் ஜ்வலித்தன. அறை முழுவதும் நீல வர்ணம் படிந்திருப்பது, ஒரு பயங்கர பின்னணிபோலவே அவளுக்குத் தோன்றியது. சிலந்திக் கண்களை பரிதாபகரமாக நோக்கும் திக்கற்ற பூச்சியென, துவண்டு வாய்புதைத்துக் கிடந்தாள் அழகி. அவன் ஏதாவது தன்னைக் கேட்டால் என்ன பதில் சொல்வது என்று கூட

அவளால் யோசிக்க முடியவில்லை. சுய அறிவு அயர்ந்தது போன்ற உணர்ச்சி.

"மஞ்சு" என்று பரவசமாக அவளை அழைத்தான் மோஹன்.

அந்தப் பரவசத்தில் அமிழ்ந்துகிடக்கும் அசுர ஆசையை அவள் பொன் உள்ளம் உணர முடியவில்லை. தன்னையே மறந்தவளாய், "ஏன் மோஹன்?" என்றாள்.

கன்னியின் கனிந்த பெண்மைக்கு பங்கம் ஏற்படுத்தத் துணிந்த அந்தக் கல் நெஞ்சுக்காரன், ஏதோ தாங்கமுடியாத வேதனைக் குட்பட்டவன் போல் எழுந்து, தயங்கித்தயங்கி நடந்து மஞ்சத்தை அணுகினான். மறுகணம் 'அம்மா' என்று அலறிக் கொண்டு மஞ்சத்தில் படுத்துக்கொண்டான்.

மஞ்சுவுக்கு ஒன்றும் புரிபடவில்லை. திக் பிரமைபிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

"மஞ்சு" என்றான் மோஹன்.

"என்னைக் கூப்பிட்டீர்களா?"

"ஆம். மஞ்சு. இன்று சாயந்திரமே எனக்கு ஏதோ மாதிரி இருந்தது. உனக்குக் கூட டெலிபோன் பண்ணலாம் என்றிருந்தேன். ஆனால்........"

"ஏன், உடம்பு சரியாக இல்லையா?"

"நன்றாகக் கேட்டாய். உன் மனம் கோணக் கூடாதே என்றுதான் நான், இந்நேரம் வரை என் வலியைப் பொறுத்துக் கொண்டிருந்தேன். மஞ்சு, தாங்க முடியவில்லை. அம்மா" என்று அவன் கூறியதும், அவள் அவன் படும் வேதனையை உண்மை என்றே நினைத்துவிட்டாள். தவிர, ஒருவர் துன்பத்தையும் காணச் சகியாதவள். பச்

ளைக் குழந்தை உள்ளம், உலகத்தின் அகோரப் பாதைகளை கற்பனையில் கூட சிந்திக்காத வெள்ளை மனது.

சரேலென்று தன்னிடத்தை விட்டெழுந்து அவனை அணுகி, "மோஹன்! ஏன் என்னிடம் இது வரை ஒளித்தீர்கள்? இது தவறல்லவா?" என்று சற்று கடிந்துகொள்வதுபோல் கேட்டாள்.

"உன்னல் தீர்க்க முடியாது இந்தப் பிணியை" என்று முனகிக்கொண்டே கூறினன் மோஹன்.

"நண்பரே! என்னல் உங்களுக்கு இத்தனை கஷ்டம். என்னை மன்னித்து விடும்."

"மஞ்சு வலி தாங்கவில்லை!"

"எங்கே?"

"ஓரிடமா? அங்கமெல்லாம்; உடல் முழுவதும்."

"என்னல் என்ன செய்யமுடியும்? தங்களுக்கு யாதொரு உபகாரமும் செய்யமுடியாத பாவியா யிருக்கிறேனே!"

"மஞ்சு, சற்று என் முதுகை தடவிக் கொடுக்க முடியுமா?" என்று கெஞ்சினன்.

வஞ்சகத்தின் சாயலை இம்மி அளவும் அறியாத மஞ்சு தன் பட்டுப் போன்ற கரங்களால் அவன் சட்டையை அப்புறப் படுத்தி விட்டு, மெதுவாக அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

"அம்மா! அம்மா!" என்று மோஹன் முன கியதும், அவன் வேதனைக்குச் சற்று தணிவு தன் கையால் ஏற்படுகிறதே என்ற திருப்தியே அவ ளைச் சந்தோஷப் படுத்தியது. எத்தனை நேரம்

இந்தச் சேவையில் ஈடுபட்டிருந்தோம் என்பதை அவள் அறிய முடியவில்லை.

"போதும்" என்று அவன் கூறிய பின்னரே தன் கைகளை அப்புறப்படுத்திக் கொண்டாள்.

சட்டென்றெழுந்த மோஹன் அவள் ரோஜா விரல்களை அழுத்தமாகப்பற்றிக்கொண்டு புன்னகை புரிந்தான். சரேலென்று அவன் கையை உதறி விட்டு ஸோபாவிற்குச் சென்ருள். தொடர்ந்து வரும் நிழல் போல் அவனும் அவள் பின் வந்தான்.

"மஞ்சு, உனக்கு ஒன்றும் தோன்றவில்லையா!" என்று தன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு கேட்டான்.

"ஒன்றும் தோன்றவில்லை" என்ருள்.

"என்னைத் தொட்டாயே? உன் மிருதுவான கையால் என் உடலுக்குப் பூரிப்பை ஊட்டினுயே?"

"இல்லை. தங்களைத்தொடும்போது என் சகோதரனுக்குப் பணிவிடை செய்யும் உணர்ச்சியே எனக்கு ஏற்பட்டது. என் தந்தைக்கு நான் செய்வதில்லையா? என் சகோதரனுக்குச் செய்யவில்லையா? இதில் என்ன வேற்றுமை?"

"அப்படியானல்?"

"என் மனதில் களங்கமில்லை."

"ஆனல் எனக்கு..."

"அதற்கு ஜவாப்தாரி நான?"

"எனக்கு என்னமோ மாதிரி யிருக்கிறது.... உனக்கு ஒன்றும் தோன்ருமலிருக்கலாம்."

"அப்படியானல் நான் வெளியே போய்விடுகிறேன்."

"அந்த சுதந்திரம் உனக்கு நான் அளித்தால்தானே?"

"பலாத்காரம் பலனை அளிக்காது."

"உன்னுடன் வாதாடி ஜயிப்பேன்."

"மோஹன், பிடிவாதம் வேண்டாம், என் உடல் ஒரு மகா கவிக்கு அர்ப்பணம் ஆய்விட்டது. உம் மனதை அகோரமாக்கும் என் அழகு அவர் கவிதா உள்ளத்தில் காவியங்களையும் அதி அற்புதக் கவிதைகளையும் இசைத்தது. ரஸிகச் சந்துரு மனதில் ஒரு லக்ஷியத்தை வளர்த்தது. ஆனால் தங்களிடம் அலங்கோலத்தை அரும்பச் செய்தது."

"மஞ்சு! நீ மகா அழகிதான். ஆனால் நீ ஒரு பெண் என்பதை மறந்து விடாதே."

"பெண் என்றால் பேதையாகவே இருக்க வேண்டியதில்லை. பெண்மை யெனும் உயரிய ஆபரணத்தை, மதிப்பிட முடியாத பொக்கிஷத்தைப் பறி கொடுக்க வேண்டியதில்லை."

"இந்த உறுதி நீடிக்காது."

"அது நீடிக்கவே நிரந்தரப் பெண்மை உலகம் தோன்றியநாள் முதல், மனித உள்ளம் விகாரத்தை வளர்த்த அந்த அசுர வேளையிலிருந்து கடும் போர் புரிந்து வருகிறது. வெற்றியும் அடைந்து வருகிறது. இந்த மறுக்க முடியாத உண்மைக்கு மறக்க முடியாத கோடிக் கோடி சம்பவங்கள் சரித்திரத்தின் அகண்ட பரப்பில் பரவிக்கிடக்கின்றன.

"சந்தர்ப்பத்தை ஒட்டியே சம்பவம். தருணத்தை நழுவவிட்டு உண்மையான இன்பத்தை அறியும் பாக்கியத்தை நழுவ விடுவது மடமை; மகிமையாகாது."

"மோஹன்! உங்களுடன் நான் வாதாட வரவில்லை."

"மஞ்சு! இன்று நேற்றல்ல நான் உன்னை விரும்பியது, எந்த நிமிஷம் உன்னை நான் சந்தித்தேனே அன்றிலிருந்தே என் மனதில் இந்த எண்ணம் வேரூன்றி விட்டது. அது புரளும் ஒவ்வொரு பொழுதும் அனந்தகோடி சூறாவளிகளின் வேகத்தில் நான் தாக்கப்படுகிறேன். என் மீது உனக்கு இரக்கமே யில்லையா?"

"துரோகி மீது தயையா? புத்தியிருந்துதான் பேசுகிறீரா?"

"மஞ்சு! ஆண்களின் தாபம் மின்னல் வேகத்தில் பிறந்து மின்னல் வேகத்தில் மறையும். ஆனால், நான் உன் மீது கொண்ட அன்போ மகாமேருவுக்கும் உயர்ந்தது. மஞ்சு! இத்தனை நாட்களாக ஏங்கி வந்தேன். இந்த அரிய சந்தர்ப்பமும் நேர்ந்தது. மஞ்சு, நீ தானே சம்மதித்து வந்தாய். உன் விருப்பத்திற்கு மாறாக நீ வரவில்லை. அதை மறந்து விடாதே."

"உம்முடன் சந்தோஷமாகப் பேசிவிட்டு, நீர் அளிக்கும் உணவையும் உண்ணவே வந்தேன்.

"பேசி விட்டாய். உன் சாப்பாடும் முடிந்து விட்டது. நான் உன்னை விரும்பி மன்றாடிக்கேட்பது, உன் சம்மதம் ஒன்றுதானே."

"மோஹன்! கடைசிமுறையாக உம்மை எச்சரித்து விட்டேன். இதைப்பற்றி ஒரு வார்த்தை நீங்கள் பேசினால் இனி உம் முகத்தில் விழிக்க மாட்டேன். நீரும் நானும் ஜன்ம சத்துருவாக மாற வேண்டியதுதான்."

"மஞ்சு! நீ இன்னமும் எத்தனை நாட்கள் குழந்தையாகவே இருக்கப் போகிருய்?"

"என் பெண்மைக்கு பங்கம் ஏற்படாதவரை."

"இது உன் பெண்மைக்கு பங்கமல்ல. பரவ சமான பரவசம்! ஆற்றில் வரும் வெள்ளம் சூல் கொண்டு நாலாபக்கமும் சிதறுவது நாம் அன்ருடம் காணும் உண்மை. இதை உன்னல் மறுக்க முடியுமா?"

"அதனல்..."

"ஒரே பாதையில், ஒரே ரீதியில், ஒரே உணர்ச்சியுடன் செல்வதால் சலிப்பு தான் ஏற்படும். வாழ்க்கையில் இனிமை சாதாரண பருவமல்ல. அதற்கு மந்தகாசம் ஊட்ட புது மணமும் புது அனுபவங்களும் தான் தேவை."

"உம் வார்த்தை எல்லை மீறிச் செல்கிறது. அதன் வேகத்தை அடக்கிக்கொள்ளப் போகிறீர்களா? அல்லது நானே அதற்கு ஒரு முற்றுப் புள்ளி தேட வேண்டுமா?"

"மஞ்சு, என்னை நீ நல்லவன் என்று நினைத்துக்கொள். கெட்டவன் என்று நினைத்துக்கொள். நான் உன்மீது கொண்ட ஆசை என் ஆயுள் முடியுமட்டும் அழியாது."

"அப்படியானல் உம் மரணத்துடன் அது மறைய வேண்டியதுதான்."

"நான் பொறுத்துப் பார்த்துவிட்டேன்."

"இது மாதிரி சம்பவங்கள் நேரும் என்று நான் நவீனத்தில் தான் படித்திருக்கிறேன். வாழ்க்கையில் நேர்வதை இன்றுதான் காண்கிறேன்."

"இது மட்டுமா? இன்னமும் நடக்கும்."

"ஆம். நடப்பவர்கள் இடத்தில் எதுவும் நடக்கும்" என்று வெகுண்டு கூறி, அப்புறம் நகர்ந்தாள் மஞ்சுளா.

மோஹனுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. உள்ளத்தில் கொழுந்து விடும் தாபம் அவன் உடலை அக்னிக் குண்டமாக மாற்றியது. எவ்விதத்திலாவது அவளை வசீகரிக்க வேண்டும் என்று அவன் துடித்தான். புயலில் சிக்குண்ட படகுபோல் பரிதவித்தான். அவள் அழகை ஆழ்ந்து ரஸிக்கக் கங்கணம் பூண்டான். வாதாடிப் பார்த்தான். கெஞ்சிப் பார்த்தான். பலாத்காரமாக ஏதாவது நேர்ந்துவிட்டால், நாளை தனக்கு ஏற்படும் தீங்கை அவன் உணராதவனல்ல. ஒரு கணம் ஏற்படும் சுகத்திற்கு தன் வாழ் நாட்களே, வருங்காலமே, சிதைந்துவிடும் என்பதை அவன் மறக்கவில்லை. கவியின் முகத்திலும் இனி ஒரு கணமும் முழிக்க முடியாது என்பதையும் அறியாதவனல்ல. ஆனால் அவள் அழகு, கொடிய வசீகரம், மனதைப் பதற அடிக்கும் அங்கப் பூரிப்பு அவன் மனதில் சண்டமாருதங்களை எழுப்பின. காமத்தைக் கிளறும் பெண்மை ஏன் அந்த ஆசைக் குரலை உதாசீனம் செய்கிறது! பெண்மை பெண்மை என்று கூறி மனதை—உள்ளத்தை—காலடியில் தேய்த்து நசுக்குகிறது! எத்தனை விபரீதங்களுக்கு வித்தாக விளங்குகிறது. அவனால் இந்த சூக்ஷ்மத்தை, சிக்கலான மர்மத்தை, அலசி அதற்கு ஒரு திறவுகோல் பெற முடியவில்லை. பெண்களிடம் அழகைப் படைத்த கடவுள் ஏன் வசீகரத்தையும் படைத்தான்? அதனால் விகாரத்தையும் சிருஷ்டித்தான் என்று அவன் மனம் எண்ணி எண்ணி வெதும்பியது.

கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை என்று அவன் நினைக்கும்போது, அவன் மனம் வெடித்து விடும்போல் அடித்துக்கொண்டது. கல்லூரியில் படிக்கும்போது மாணவிகள் அவன் அறைக்கு இரகசியமாக வந்து அவனைத் தங்கள் மனதில் ஊறிக் கிடக்கும் காதல் வெள்ளத்தில் எத்தனை முறை மூழ்க அடித்திருக்கிறார்கள். ஒரே ஒரு முறை தங்கள் கைகளையும் அவன் குலுக்க மாட்டானா என்று எத்தனை பெண்கள் ஏங்கி யிருக்கின்றனர். அவர்களும் பெண்கள் தான். மஞ்சுவும் பெண்தான். ஆனால் அவர்களிடம் காணப்படாத, லவலேசமும் தென்படாத லஜ்ஜை, உறுதிக் கனல், இவளிடம் ஏன் குடிகொண்டு அவனைக் குத்துயிரும் கொலை உயிருமாக வருத்துகிறது. பெண்களுக்குள் தான் எத்தனை வித்தியாசம். 'உறுதி, பெண்களுக்கு பிறப்புரிமையல்ல. ஒரு சிலரின் தனிப்பட்ட நிர்மலமான ஆபரணம்' என்பதை அப்பொழுதுதான் அறிந்தான்.

தன் மனதை அவன் சமாதானப்படுத்திக் கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் தீயிலிட்ட வெண்ணெய்போல் அவள் சௌந்தர்ய ஜ்வாலைமுன் இருந்த இடம் தெரியாமல் உருகிப் போய்விட்டன.

மாற்றான் மனைவியைக் கற்பழிக்க முதன் முதலில் அவன் மனம் மறுத்தது. ஆனால் மஞ்சுவின் பேரழகும், அவளுடன் தான் நெருங்கி அனுதினமும் பழக வேண்டிய நிர்ப்பந்தமும், அவனை வேறு மனிதனாக மாற்றிவிட்டது. லக்ஷியக் கனவுகளைச் சிதற அடிக்கவும் தூண்டிவிட்டது. அசுர ஆசைகளை வளர்க்கவும் துணிச்சல் கொடுத்தது. அவனை பேயாகவும் முறுக்கிவிட்டது.

"மஞ்சு! அசாதாரண தாபத்தில் நான் வெந்து போய்க் கொண்டிருக்கிறேன். என் உடல் முழுவதும் ஒரு அகோர அக்னி ஜ்வாலே வீசுகிறது. நான் கற்ற கல்வியும், கல்லூரியில் பண்பட்ட உணர்ச்சியும், நான் உயரிய நடத்தை மீது வைத்திருக்கும் கௌரவமும் என்னை இந்தக் கொடிய சந்தர்ப்பத்தில் கை தூக்கி உதவ மறுத்து, என்னை எல்லே காணுத படுகுழியில் இழுத்துக்கொண்டே செல்கின்றன. மஞ்சு, உன் பிடிவாதம் என்னை பேயாக மாற்றி விடுமோ என்றே அஞ்சுகிறேன். நீ லக்ஷியவாதி என்பதை நான் நன்கறிவேன். இந்தத் தருணம் நீ இச்சாபூர்த்திக்கு இணங்க மறுத்தால், நான் உன்னை பயமுறுத்தும் பலாத்காரத்தினின்றும் வெற்றிகரமாக விலகி நின்ருலும், இப்போது குதறுண்ட புண் நான் மாளுமட்டும் ஆருது. இது சத்தியம். நானும் அத்தனை கொடியவன் அல்ல. துன்மார்க்கனுமல்ல. உணர்ச்சியின் பிடியினின்றும் விடுபட அசக்தனுயிருக்கிறேன். இந்தத் துர்ப்பாக்கிய நிலேமையில், என்னேயே மறந்து, உன் பரிசுத்தமான பெண்மைக்கு பங்கம் ஏற்பட்டுவிடுமே என்பதையும் மறந்து, என் வருங்கால வாழ்வு ஒருக்கால் சூன்யமாகலாம் என்ற கிலேசத்தையும் அசட்டை செய்து, உன் அழகை அணுஅணுவாகச் சுவைக்க மதிமயங்கி உன்னிடம் மன்ருடுகிறேன். உன் மறுப்பு என் உறுதியை வேரோடு பிடுங்கி எறிய முடியாது. இதை நீ சிந்தித்துத்தான் ஆக வேண்டும். எனக்கும் நிம்மதியில்லே. உனக்கும் நிம்மதியில்லே." என்று அழாத குறையாய் அவள் காலடியில் மண்டியிட்டுக் கெஞ்சினுன் மோஹன்.

கடலலேபோல் பின்னிக்கொண்டு வரும் அவன் சொற்கள் அவள் நெஞ்சை உருக்கவில்லே. நிரந்தர பெண்மைக்கு உறுதியை ஊட்டியது. நாகரீக

உலகை அமானுஷ்ய உத்வேகத்துடன் கவர்ந்து கன்னி உள்ளங்களைக் குதறும் சாபக் கேட்டின் சாயல், தன்னையும் பிடித்து பயமுறுத்துகிறதே என்ற சஞ்சலம் ஒரு நிமிடம் அவளைக் கலக்கியது. ஆனால் கலக்கம் நீடிக்கவில்லை.

"துரோகி! உன் வஞ்சம் எல்லைமீறி விட்டது. உன் அகோர எண்ணங்களுக்கு என்றென்றும் மன்னிப்பே இல்லை. என் திக்கற்ற நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு உன் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்று கனவு காணாதே. நீ கொண்டிருக்கும் இந்த எண்ணம் உன் இறுதியை, உன் அலங்கோல அழிவை, உன் மரணத்தை துரிதப்படுத்தும். நீ உயிருடனிருப்பதாகப் பெருமிதம் கொள்ளவேண்டாம். எந்த நிமிஷம் இந்த விஷம் உன் உள்ளத்தில் படிந்ததோ, அந்த நிமிஷமே, அந்த நொடியிலேயே, உன் உடல் மடிந்தது. நசிந்துபோய் விட்டது. உன் வாழ்நாள் தீர்ந்தது. மறக்காதே. நீ மடிந்துவிட்டாய் நீ அக்னிக்கு இரையாகும் உரு, உன் சவ நடமாட்டம், உன் சவ உறக்கம் நீ உலகில் வாழ்வதாக ஒரு போதையை ஊட்டிவரும். என் சாபம் வீண் போகாது. பிறர் மனைவியை இச்சிக்கும் நீ இந்த ஜன்மத்தில் கடைத்தேற வழியே யில்லை. நாசம் ஒன்றே உன் பாபச் சடலத்திற்கு விடுதலை" என்று உறுதியே உருவெடுத்தாற்போல் உதறினாள் வார்த்தைகளை.

மோஹன் பிரமித்துவிட்டான். சாந்தமே உருவாக நிற்கும் மஞ்சுளா சீற்றத்தில் மதுரையை தகித்த கண்ணகிபோல் தோற்றமளிப்பதைக் கண்டு திகைத்துப் போய்விட்டான். அவள் கண்களினின்றும் வீசும் தாபம் அவனை வாட்டியது.

ஆனால் வெறிகொண்ட மனம் இலகுவில் மருண்டு விடுமா?

"மஞ்சு!" என்ருன்.

மிதிபட்ட நாகம் போல் சீறி எழுந்தாள், மஞ்சுளா. "துரோகி! என்னை 'மஞ்சு' என்று அழைக்க உன் நா கூசவில்லையா?" என்று அறைவது போல் கேட்டாள்.

"உன்னையே நான் சுவைக்க ஏங்குகையில்...." என்று அவன் கூறி முடிப்பதற்கு முன் ஆவேசம் வந்தவள் போல் அவனை அணுகினுள் மஞ்சு. அவளுக்கு, தான் என்ன செய்யப் போகிருேம் என்பதே தெரியவில்லை. பல்லை நற நறவென்று கடித்தாள். கோபத்தில் அவள் கன்னம் காலைக் கதிரவன் போல் சிவந்தது. அவள் கைகள் துடித்தன.

மறு நிமிடம் 'பளார்' என்ற சப்தம்.

அவள் விரல்களின் அடையாளம் மோஹனின் கன்னத்தில் சூடு போட்டது போல் ஜ்வலித்தது.

திக்பிரமை பிடித்தவன் போல் நின்ருன் மோஹன். பெண்மையின் சீற்றம் அவனை பேடியாக்கி விட்டது ஒரு கணம்.

"உனக்கு இத்தனையா?" என்று கூறி ஆவேசத்துடன் அவளை நோக்கினுன்.

அந்த அசுர பார்வையில் மஞ்சு துவண்டு விட்டாள். மான்போல் அவள் கண்கள் மிரண்டன. தப்பி ஓட வழியில்லை.

தன்னை அதிவேகமாக நெருங்கும் மோஹனைக் கண்டு பதறி, "ஐயோ! தெய்வமே!" என்று அலறி விட்டாள்.

மறு நிமிடம் அறையின் கதவு 'படார்' என்று திறந்தது.

# 4

"வேலியே பயிரை நோட்டம் பார்க்கிறதா?" என்று கூறிக் கொண்டே அந்தத் தருணத்தில் கதவை உதைத்துத் திறந்து உள்ளே வந்த சந்துருவைக் கண்டவுடன் சிம்ம சொப்பனம் கண்டவன் போல் திகைத்து நின்றான் மோஹன். டைரக்டரை அந்த நேரத்தில் அவன் தன் வீட்டில் எதிர் பார்த்தவனே யல்ல. சப்த நாடியும் நடுங்கிற்று அவனுக்கு. மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்த காதகன் ஆனதால் திருட்டு முழி முழித்துக்கொண்டு கையைப் பிசைந்து கொண்டு நின்றான் மோஹன்.

எதிர்பாரா சம்பவங்கள் ஒருத்தியை பேயாக மாற்றும்; அல்லது குழந்தையாக உருவாக்கிவிடும். சந்துருவைக் கண்ட மஞ்சு "ஓ" என்று கதறி ஆயிரம் நாட்கள் பிரிந்து தன் தந்தையை நாடும் கன்னிபோல், அவனருகே ஓடினாள். ஒரு சண்டாளச் செய்கையிலிருந்து தான் வெற்றிகரமாக விலகி விட்டோம் என்ற அங்கப் பூரிப்பில், அவள் உண்மையிலே ஒரு குழந்தையாகவே மாறிவிட்டாள். தன் கணவனுடைய அந்தரங்க நண்பராயிற்றே என்றும் பாராமல், அவருடைய பட படக்கும் தோள் மீது கொடி போல் படர்ந்தாள். அம்பின் குறி தவறி இலை நடுவே மறைய, தன் அந்தி காலம் நிச்சயம் என்று கதி கலங்கி மூர்ச்சித்து மரக்கிளையினின்றும் புல் தரைக்கு விழும் புறா போல் தோற்றினாள் மஞ்சு.

தன் மார்பில் சின்னஞ் சிறு கொடி போல் படர்ந்து தேம்பித் தேம்பி அழும் மஞ்சுவைக் கண்ட சந்துருவுக்கு அவனை மீறியே கண்களினின்றும் கண்ணீர் ஆறாகப் பெருகத் துவங்கியது. தன் மீது அவள் கொண்டிருக்கும் கட்டு மீறிய நம்பிக்கைக்கும், அவன் முன் பாபமே உருவாக நிற்கும் மோஹ

னின் சண்டாளத் தோற்றத்துக்கும், மனத் திராசில் போட்டு எடை பார்க்கலாம் என்று கூட அவன் உள்ளம் மறுத்து விட்டது.

அவளைக் குழந்தைபோல் கையில் வாரி எடுத்துச் சென்றான். பக்கத்திலிருக்கும் சோபாவில் மெதுவாக உட்கார்ந்து, அவளைத் தன் மீது சாத்திய வண்ணம் தாங்கிப் பிடித்து, அவள் பட படக்கும் கைகளையும், சூல் கொண்ட அலை போல் விம்மும் மார்பையும் பார்த்துப் பார்த்து அனலிட்ட மெழுகு போல் தவித்தான்.

"சண்டாளா! துரோகி! உன்னை நம்பியா இவள் இங்கு வந்தாள். உன்னை நம்பினேன். நீ பாம்பு என்று உணரவில்லை. இந்தக் கொடுமை புரிய எத்தனை நாட்கள் உன் வஞ்சக உள்ளம் கனவு கண்டது?" என்று ஆத்திரமாகக் கூறினான் சந்துரு.

"நான் செய்தது தவறு தான். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்று கெஞ்சும் குரலில் மழுப்பினான் மோஹன்.

"உனக்கா மன்னிப்பு? துரோகி, உன் அடாத செய்கைக்கு மன்னிப்பே இல்லை."

"நான் ஒன்றும் பலாத்காரம் செய்யவில்லை."

"உன் கொடூர எண்ணம் அங்க வெற்றி அடையவில்லை. அப்படித்தானே?" என்று அவன் மீது எரிந்து விழுந்தான் சந்துரு.

"ஏதோ தவருக நடந்து விட்டேன். என்னை மன்னித்து விடவேண்டும்."

"மன்னிப்பு கேட்கக் கூட மனம் துணிகிருயா? நீ நாசமாகத் தான் போகப் போகிருய். உன்னை

நான் தண்டிக்கப் போவதில்லை. உன் சண்டாளத் தனத்தை தெய்வமே தண்டிக்கட்டும்'' என்று கூறி மஞ்சுவை நோக்கினன். அதற்குள் அவளும் கண் விழிக்கவே, "அம்மா மஞ்சு, எழுந்திரு; இந்தப் பாபி யின் வீட்டில் நாம் இருக்க வேண்டாம். போகலாம் வா?'' என்று கூவினன்.

அவள் மெதுவாக எழுந்தாள். சந்துருவைப் பின் பற்றி மோட்டாரில் ஏறிக்கொண்டாள். மோட் டாரும் புறப்பட்டு அவள் வீட்டை அடைந்தது.

மாடி அறைக்குச் சென்றதும், "உங்கள் நண் பர் எங்கே?'' என்று கேட்டாள்.

"ஒரு அற்புதமான காவியம் அவன் உள்ளத் தில் உதித்து விட்டது. அதன் சிருஷ்டியில் அவன் ஈடுபட்டு விட்டான். அவனது சிருஷ்டி மயக்கம் தெளிவதற்கு ஒரு இரவு போதாது'' என்று மந்திரம் ஜபிப்பது போல் சொன்னன் சந்துரு.

"மஞ்சு! படுத்துக் கொள் அம்மா! நாளை மாலை உன்னை வந்து பார்க்கிறேன்'' என்றவன் கூறிய தும், "வேண்டாம் உங்களுக்கு அவசர காரியம் ஒன்றுமில்லையே?'' என்று கேட்டாள்.

"இல்லை.''

"எனக்குத் தனியே யிருக்க பயமாயிருக்கிறது. என்னைத் தனியே விட்டுப் போகாதீர்கள்'' என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

சந்துருவுக்கு அழுகை வந்து விட்டது. அவள் பஞ்சணையில் படுக்கவே, பக்கத்தில் ஒரு சாய்வு நாற் காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த படி சிந்தனையில் ஆழ்ந்தான்.

சற்று நேரம் சென்றதும், அவள் விசும்பி விசும்பி அழும் சப்தம் கேட்டு, "மஞ்சு! என்னம்மா!" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை!" என்று கூறினளே ஒழிய அவள் கண்களினின்றும் வழிந்து ஓடும் கண்ணீர் ஓடை அவள் புடவையை நனைத்தது.

"அழாதே மஞ்சு! இதற்கெல்லாம் காரணம் நான் தான். உன் வெள்ளை உள்ளம் இந்த சோதனையை எல்லாம் அறவே அறியாதது. நீ நிஷ்காம்யமாய் உன் வாழ்நாளை உன் கணவனுடன் கழித்து வந்தாய். லக்ஷ்ய வெற்றி, லக்ஷ்ய வெற்றி என்று கூறி உன் பரிசுத்தமான உடலுக்கு பயங்கர பங்கத்தையே தேடினேன்."

"சந்துரு! தங்கள் போன்ற பரிசுத்தர்கள் உள்ள உலகில் ஏன் இந்தச் சண்டாளர்கள் இன்னமும் உலவி வருகிறார்கள். இந்த அநீதியை எப்படி இயற்கை அன்னை சகிக்கிருள் தெரியவில்லையே."

"மஞ்சு! இயற்கையின் சகிப்புத் தன்மை பிரம்மாண்டமானது. காலத்தைக் கடந்தது. மேழிச் செல்வத்தை வாரி வாரி இறைத்த மானிடர் அவள் பரிசுத்தமான நிலப் பரப்பில் இரத்தத்தையே சிதறுகிருர்கள். இந்த அசேதன செய்கையில் அவள் வளம் சோரவில்லை; மீண்டும் அதிகரிக்கிறது. மன்னிப்பே அவள் தத்துவத்தின் ஜீவநாடி."

"மோஹனை நான் எப்படி எல்லாம் நினைத்தேன். என் சகோதரனுக்கு மேல் பாவித்தேன். அவர் உடல் வலியைப் போக்க என் கைகளாலேயே பிடித்து விட்டேன். ஆனல் என் செய்கை அவர் மனதில் அன்பை வளர்க்காமல், கொடிய காமத் தீயை வளர்த்தால், ஜவாப்தாரி நானு?"

"இல்லவே இல்லை; தீயவருக்குச் செய்த உபகாரத்திற்கு கைமேல் பலன் இது. அவர்களை திருத்துவது சுத்த மதியீனம்."

"சந்துரு! நான் இந்தப் படுகுழியில் விழாமல் பிழைத்தது தெய்வ சங்கல்பம் தான். இதனால், நான் ஒரு மகத்தான உண்மையை இன்றே அறிந்தேன். யாருடனும் பழகும்போது முன் ஜாக்கிரதையுடனும், சமயோசித புத்தியை உபயோகித்தும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இன்றே அறிந்தேன்."

"ஆம் மஞ்சு! இதனால் பெண்கள் ஆண்களுடன் அநாயாசமாகப் பழகக் கூடாது என்று அர்த்தமில்லை."

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பதை எப்படி அறிய முடியும்? எல்லோருடனும் பழகி வருகிறோம். அவர்களால் எவர் மனம் விகாரம் பெறவில்லை என்று அறிவது?"

"காலத்தின் நீரோட்டத்தில் சிக்குண்ட நாம் அதன் தேக்கங்களில் நெளிந்தும், அதன் சுழலில் சிக்காமல் அப்புறம் விலகியும், அதன் போக்கில் சுமுகமாக மிதந்து செல்லும் வரை துன்பம் ஒன்றுமில்லை. ஆனால், என்றென்றும் இன்னல் இல்லாமல் செல்வதென்பது முடியாத காரியம். எந்தத் துன்பத்தையும், எந்த சந்தர்ப்பத்தின் விகாரத்தையும் அனுபவித்த பின்னரே ஞானோதயம் பெறமுடியும். விதியின் விளையாட்டை முறியடிப்பது சாத்தியமில்லை. அதன் கொடுமையை, தாபத்தை, அகோரத்தை சகித்து வெற்றி பெறுவதே நம் நோக்கமாயிருக்கவேண்டும். இந்த எண்ணம் நம் மனதில் வேரூன்றினால், சலனத்தின் சாயல் நம்மைத் தீண்ட வழியில்லை."

"எனக்கென்னவோ நீங்கள் சொல்வது சற்றும் புரிபடவில்லை. இன்றைய உலகம் சுழன்று செல்லும் வேகத்தைப் பார்த்தால் இது தப்பவோ அதினின்றும் விமோசனமோ நிச்சயம் உண்டு என்று கூறவோ எனக்குத் தைரியமில்லை."

"மஞ்சு! உன் மனம் புண் பட்டிருக்கிறது. ஒரு சண்டாளனின் செய்கை ஹிருதயத்தில் முள்வேலி கட்டி விட்டது. அது முறிந்து மறையவும், உன் ஹிருதயப் புண் ஆறவும் சில நாட்கள் ஆகும். இந்த அதிர்ச்சியின் எதிரொலி இன்னமும் சில காலம் உன் உடலை உலுக்கிக் கொண்டுதானிருக்கும்."

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். மனிதர்களுக்கு இந்த அடக்க முடியாத துடிப்பும் அசுர அகோரமும் கூடவே கூடாது."

"முற்றிலும் உன் தீர்ப்பை நான் ஆமோதிக்க மாட்டேன். மஞ்சு! மலரில் மது இருந்தால், வண்டு அதை எவ்விதத்திலும் சூறையாடவே சூழ்ச்சி செய்யும். அது கையாளும் முறை நீதியோ அநீதியோ, அந்த வேலையின் வெறியே வெற்றி அடையும்."

"மதுவைத் தாங்கி நிற்பது மலரின் குற்றமா?"

"என்னைக் கேட்காதே. மலரையும், மலரினும் மென்மையான பெண்மையையும் சிருஷ்டித்த கடவுளைக் கேள்" என்று கூறி சிரித்தான் சந்துரு.

"நண்பரே! அப்படியானல்?"

"அப்படியானல் என்ன? உறுதி உள்ளவரை பெண்மைக்கு ஹானியில்லை. பெண்மை வலிது: உயரியது. மாசு மறுவற்றது. மகத்தானது. அதன் வலி

மைக்கு இணை சிருஷ்டியின் எந்தக் காலத்திலும் ஏற்படவில்லை. லோகமாதா பார்வதியின் பண்பும், பாஞ்சாலியின் உறுதியும், ஸீதையின் பரிபூரணமும் பண்பும் பிரபஞ்சம் உள்ள மட்டும் நிரந்தர பெண்மையின் மகாமேரு சிகரங்கள். மஞ்சு, இன்று நம் பரதகண்டம் நூற்றுக் கணக்கான ஆண்டுகளின் அகோரப் பிடியில் சிக்கியும், தானும் ஒரு நாடு என்று சர்வ தேச அணியில் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால், அதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். நாகரீகத்தின் நாசகார நிழல், நம் அகண்ட தேசத்தின் மூலைகள் எங்கும் நிலைத்து நின்றாலும், நம் நாட்டுப் பெண்கள் தங்கள் உயிருக்கும் மேலாக வளர்த்து வரும் பதி பக்தி, கற்புக் கனல், இன்னமும் பலகோடி வருஷங்கள் அவர்களைக் காத்து நிற்கும். இது சத்தியம். சத்தியம்'' என்று டைரக்டர் சந்துரு அடித்துக் கூறியதும், ஒரு அமானுஷ்ய ஒளி அவள் கண்களில் நர்த்தனம் புரிந்தது.

"என் உடலில் உறங்கிக் கிடக்கும் சக்தியை எனக்கு ஞாபக மூட்டினீர்களே. இதற்கு நான் உங்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று கூறி தன் கைகளை அவன் தோள்மீது பொருத்தினாள்.

அந்த ரோஜா விரல்களை அன்புடன் நெருடினான் சந்துரு. "சகோதரி, இந்த மகத்தான உண்மை இன்று போதையுற்றுக் கிடக்கிறது. உணர்ச்சியற்றுக் கிடக்கிறது. உயிரற்றது போல் தோற்றுகிறது. இதற்கு ஒரு உயரிய கௌரவம் அளிக்கவே உன்னைக் கதாநாயகியாகக் கொண்டு 'புயலுக்குப் பின்' என்ற நாடகத்தை திரையிட பகீரதப் பிரயத்தனம் செய்கிறேன். மஞ்சு, நீ நினைத்தால், நீ ஒத்துழைத்தால் நான் வெற்றி

அடைந்தே தீருவேன்" என்று கூறி உணர்ச்சி வசப்பட்டு கதறிவிட்டான் சந்துரு.

மஞ்சத்தினின்றும் எழுந்தாள் மடந்தை. சந்துருவின் அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு வானத்தில் மிளிரும் நக்ஷத்திரக் கூட்டங்களை இமை கொட்டாமல் நோக்கினுள். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒன்ருேடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு ஜ்வலித்தன. அவள் கவனத்தை முற்றும் கவர்ந்த விண்ணை சந்துருவும் நோக்கினுன்.

சரேலென்று ஒரு நக்ஷத்திரம் ககன மார்க்கத்தில் ஒளிக்கொழுந்து காட்டி மின்னி மறைந்தது.

சந்துரு பெருமூச்சு விட்டான்.

"அதன் மறைவில்தான் எத்தனை அழகு!" என்ருள் கவிபத்தினி.

"ஆம், அவை யாரைக் கேட்டுக் கொண்டு பிறந்தன. யாரைக் கேட்டுக்கொண்டு மறைந்தன. எந்த நியதி நக்ஷத்திரங்களை கட்டுப்படுத்துகிறதோ, அதே நியதி உலக வாழ்வையும் ஓட்டுகிறது. மஞ்சு! நம் கண்முன் சற்று முன் ஒரு நக்ஷத்திரம் மறைந்ததே. அதன் மறைவிற்கு வானத்தில் ஒரு அனுதாபச் சலனமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதுபோல் கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் மலர்ந்து மங்கி யிருக்கும். நம்மையே எடுத்துக் கொள். ஆண்டாண்டுதோறும் கோடிக் கணக்கில் பிறவியும் மரணமும் சொல்லி வைத்தாற்போல் நடந்து வருகிறது. மரணத்தின் பிரமிப்பு ஊட்டும் ஓட்டத்தை ஒரு நொடி நாம் சிந்தித்தால், நம் வாழ்க்கையை ஒரு தூசிக்கும் மதிப்பிட முடியாது. இந்தக் கேவல வாழ்க்கை [முடிவதற்குள் எத்தனை

மனத்தாங்கல், அசூயை, பொறாமை, லோபம், களவு, கபடு, சூது.''

"இதையேன் மோஹன் போன்ற தீயர்கள் உணரவில்லை?''

"உணராமலில்லை. அந்த உணர்ச்சிக்குக் கௌரவம் அளிக்க அத்தனை மனக் கசப்பு.''

"சந்துரு! உலகில் இவன் போன்ற கொடியவர்கள் உள்ளமட்டும், கற்புள்ள மாந்தர் தைரியமாக எப்படி உலாவுவது?''

"காட்டில் இருக்கும் பாம்பு வீட்டிலும் இல்லையா? எச்சரிக்கையுடனும், முன் யோசனையுடனும் எந்தக் காரியத்தைச் செய்யும் வரை தீமையே கண்ணுக்குத் தட்டாது. அப்படி இந்த மாய வலையில் நம்மை மீறி தவறி விழுந்துவிட்டால், அது அளிக்கும் அந்தத் தருண சுகத்தை கௌரவிக்காமல், அதனின்றும் அறுத்துக்கொண்டு வெளியேறுவதே புத்திசாலிகளின் பண்பு.''

"சந்துரு! எல்லோராலும் இது சாத்தியமா?''

"சாத்தியமோ சாத்தியமில்லையோ, நாம் உஜ்ஜீவிக்க, இந்த உலகில் இன்னலின் பிடியினின்றும் தப்ப இந்த மார்க்கம் ஒன்றே ஒன்றுதான்.''

"சந்துரு! என் மனம் ஏனோ ஒரு நிலையில் இல்லை. உலகமே என் கண்முன் பயங்கரமாய்ச் சுழல்வது போல் தோன்றுகிறது.''

"ஆம், மஞ்சு! நானே சொல்லவேண்டும் என்றிருந்தேன். இந்த சம்பவத்தை மறக்க முயற்சிப்பதே நல்லது. நடந்ததைப் பற்றி நாம் பேசப் போனால், நம் மனப் புண் ஆழமாக விரியுமே தவிர, அது மூடுண்டு மறைவது இந்த ஜன்மத்திலில்லை.

வாழ்க்கைப் பாதையில் இதுபோன்ற அனுபவங்கள் அன்றாடம் துளிர்ப்பதில்லை. இதுபோன்ற மகத்தான சோதனை ஒரு முறையே தோன்றும். மஞ்சு, நீ உன் மனதை திடத்தால், உன்னை படுகுழியில் தள்ளி தவிக்க வைக்கும் நிர்ப்பந்தத்திலிருந்தும் தப்பிவிட்டாய். இனி உன் வாழ்க்கையில் இதுபோன்ற சோதனைகள் தோன்றாது என்றே நம்புகிறேன். தூங்கம்மா, நேரமாகிறது. நான் உன்னைக் காலை வந்து பார்க்கிறேன்'' என்று கூறினான் சந்துரு.

"ஆம். உங்களுக்கும் அலுப்பாக இருக்கும். நீங்கள் வீடு போயாக வேண்டும். சந்துரு, உங்கள் சிநேகிதருக்கு இந்த விஷயம் தெரியுமா?'' என்று கவலை தொனிக்கக் கேட்டாள்.

"அவன் கவிதை எழுதுவதில் மூழ்கிவிட்டான். அவன் சாதாரண மனிதப் பிறவியில்லை. அமானுஷ்ய கலைஞன் உன் கணவன். மஞ்சு, நான் உன்னை நாளைக் காலை வந்து சந்திக்கிறேன்'' என்று கூறி அவளை விட்டு பிரிய மனமில்லாதவன் போல் அறையை விட்டு வெளியே சென்றான்.

இலைகளில் சலசலக்கும் காற்று அறையின் மௌனத்தை சிதைத்தது. மஞ்சு உள்ளத்திலும் சாந்தி யில்லை.

# 5

கபாலி காகிதத்தில் தீட்டிய கவிதை உலர்ந்து போவதற்குள் அவன் கற்பனையின் ஆதர்சம்போல மஞ்சு அவன்முன் பிரசன்னமானாள். எழில் பொங்கும்அவள் தோற்றம் இதழ் உதிர்ந்த மலர் போல் துவண்டு கிடப்பதைக் கண்டு கவியின் உள்ளத்தில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. அவளை வாரி கையில் எடுத்து, மார்போடு தழுவிக்கொண்டு, “மஞ்சு, ஏன் இப்படி வாடியிருக்கிறாய்?” என்று அன்பு ததும்ப கேட்டான் கபாலி.

அவன் பிடியில் நெளியும் மஞ்சு அவன் மீது படர்ந்து, அவன் முகத்தோடு தன் கன்னத்தை வைத்துக்கொண்டு, தன் மனதில் வெடித்து எழும் உணர்ச்சிப் பிரவாகத்தை கண்ணீர் ஓடையாக வழிய விட்டாள். அவளது புரு ஹிருதயம் படபடப்பதைக் கண்டு சகியாத அவள் கணவன் அவளை இறுகத் தழுவிக்கொண்டு, “செல்வமே! உன் மனப் போராட்டத்தை அறிவேன். குற்றவாளி நான்தான்” என்று கூறி தன் அதரத்தை அவள் கேசத்தில் புதைத்துக்கொண்டான்.

கவியுள்ளமும் நடிகையின் எண்ணமும் கலந்து உறவாடின. அவள் மௌன வேதனையை அவன் கற்பனைக் கண் ஊடுருவிப் பார்த்து கலங்கிச் சுழன்றது.

“மஞ்சு, உனக்கு ஏதாவது விபரீதம் நேர்ந்து விட்டதா?” என்று பச்சைக் குழந்தை போல் அவளைக் கேட்டான்.

அவள் பதில் சொல்ல வில்லை. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

“மஞ்சு! உன் அழுகை என் துக்கத்தை அதிகரிக்கிறது. உன் மனப் போராட்டத்தை அறி

வேன். உன்னிடம் போதிய கவனத்தைச் செலுத்த எனக்கு அவகாசமில்லை. இதுதான் உண்மை. என்னைத் தவருக நினைத்து வருந் தாதே. நான் இப்போது ஒரு மகா காவியத்தை இயற்றிக் கொண்டிருக்கிறேன்.''

''எழுதுங்கள், எழுதுங்கள். நன்ருக எழுதுங் கள். உங்களுக்கு வெற்றி கிட்ட வேண்டும். இதுவே என் ஆத்ம பிரார்த்தனை.''

''ஏனம்மா இப்படி மனம் வெந்து பேசுகிருய்?''

''நானு பேசுகிறேன்? ஐயோ! என்னை ஏன் நீங்கள் உதாசீனம் செய்கிறீர்கள்?'' என்று பதறிக் கேட்டாள்.

இடி ஓசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கி விட் டான் கபாலி.

உதாசீனம்!

யார் யாரை உதாசீனம் செய்தார்கள்! இந்தக் கேள்வியை அவளது குதறுண்ட எண்ணம் இசைத்தது.

பதில் வானத்தில் தயங்கி நின்றது.

''மஞ்சு, என்ன இப்படிப் பேசுகிருய்! உன்னை நான் ஒன்றும் உதாசீனம் செய்தவனல்ல. என் னிடம் உனக்கு நம்பிக்கையில்லையா? மஞ்சு! நீதான் இப்படிப் பேசுகிருயா?'' என்று பதட்டமாய் கேட் டான் கவி.

''போதும், என்னை உங்களது நண்பர் பிடிக்கும் சினிமாவில் நடிக்க அனுமதித்தீர்கள். அதன்பின் என்ன நடக்கிறது என்பதை

அறிய சிறிதேனும் பிரயாசை எடுத்துக் கொண்டீர்களா?''

"மஞ்சு! என் மௌனத்திற்குக் காரணம் என் நம்பிக்கைதான். சந்துரு உத்தமன். தீய வழியில் அவன் மனம் என்றென்றும் செல்லாது. உன் பெண்மைக்குத் தக்க காவலனைத் தேடி உன்னை அவனிடம் ஒப்படைத்து விட்டேன். அதன்பின் அவன் நல்ல எண்ணத்தை உரை கல்லில் தீட்டிப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. இந்த மனப்பான்மையினின்றும் என்னை விலக்கிக் கொள்வது கடினம்.''

மஞ்சு இதைக் கேட்டவுடன் புயலில் அகப்பட்ட படகுபோல் தவித்தாள். மறுகணம் அவனை கட்டுமீறிய ஆவேசத்துடன் தழுவிக்கொண்டு, கண்களில் நீர் மல்க "உண்மை, முற்றும் உண்மை, சந்துரு மனுஷப் பிறவியில்லை. அவர் உத்தம புருஷன்'' என்று கூறி ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள்.

"மஞ்சு! என்று உன்னை அவனிடம் ஒப்படைத்தேனோ, அன்றிலிருந்தே என் மனதில் கிலேசமோ சந்தேகமோ இம்மியளவும் நிழல் கூட தட்டவில்லை. அன்றிலிருந்தே நான் என் கற்பனையை வேறு திசைக்கு முடுக்கி விட்டேன். வெற்றியும் படிப்படியாக அடைந்து வருகிறேன்.''

"தங்கள் தூய உள்ளத்திற்கு பங்கம் ஏற்படாது என்றே நம்புகிறேன்.''

"மஞ்சு, படப்பிடிப்பு எத்தனை தூரத்திலிருக்கிறது?'' என்று கேட்டான்.

"வாயு வேகத்தில் உதித்த திட்டம் ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்லுகிறது!" என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தான் சந்துரு.

டைரக்டரைக் கண்ட உடனே மஞ்சு தன் கணவன் தழுவலினின்றும் தன்னை விலக்கிக் கொண்டு தன் புடவையையும் சரிப்படுத்திக் கொண்டாள்.

"என்ன மஞ்சு?" என்று சிரித்தான் சந்துரு.

பொற்கொடி புன்முறுவல் பூத்தாள். உள்ளே சென்று மூன்று கோப்பைகளில் காப்பியும் துரிதமாகவே தயார் செய்துகொண்டு வந்தாள்.

மூவரும் மௌனமாக கோப்பையிலுள்ள காப்பியை காலி செய்தனர்.

"என்ன! கபாலிக்கு திடீரென்று படத்தின் மீது என்றும் ஏற்படாத கவலை உதித்துவிட்டது?" என்று கேட்டான் சந்துரு.

"அதற்கில்லை சந்துரு. எடுத்த காரியம் சீக்கிரமே முடிய வேண்டாமா? நீ தானே ஆத்திரப்பட்டாய்" என்றான் கவி.

"ஆத்திரப்பட்டேன். நல்ல பாடமும் கற்றுக் கொண்டேன்" என்றான்.

கபாலி விழித்தான்.

"கபாலி, ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது பொய்யா மொழியல்ல. என் விஷயத்தில் உண்மையாகவே அது பலித்துவிட்டது. ஆலோசிக்கா

மல் திட்டத்தின் சில அங்கங்களை துரிதப்படுத்தினேன்."

"சந்துரு, அப்படியானால் என் நாடகம் திரையிடுவதுபற்றி ஹானி ஏற்பட்டு விட்டதா!"

"உன் நாடகத்தைப் பற்றி ஒரு தகராறுமில்லை. வந்த ஆபத்தெல்லாம் என் முன்யோசனை யற்ற செய்கையில்தான்."

"ஏன்? மஞ்சுவின் நடிப்பு அத்தனை உயர்ந்த ரகத்தில் இல்லையே?"

"பார்த்தாயா உன் வீண் சந்தேகத்தை. அவள் நடிப்பில் அப்பழுக்கு உண்டா? அல்லது குறை கூறத்தான் நான் துணிய முடியுமா?"

"மஞ்சு, கவனித்துக் கொள். நாளைத் தவறிப் போய் சந்துரு ஏதாவது பிதற்ற ஆரம்பித்தால், இதை அவனுக்கு ஞாபகப்படுத்த மறந்து விடாதே."

"கபாலி! உலகத்தில் நாம் அனுதினமும் எத்தனையோ பேர்களைச் சந்திக்கிறோம். அவர்களுடன் உறவாடுகிறோம். நெருங்கிப் பழகுகிறோம். அத்தனை பேர்களும் நம் உற்ற நண்பர்களாக மாறி விடுவதில்லை. அவர்கள் முகமும் நினைவும் நம் நெஞ்சாழத்தில் பதிந்து விடுகின்றன, கிணற்றில் போட்ட கல் போல். அவர்களை மீண்டும் சந்திக்கும் போது, அவர்கள் நினைவு கனக்கத் தான் செய்கிறது. சற்று முயற்சித்தே; அவர்களை நம் நெஞ்சாழத்தின் அடியிலிருந்து வெளியே கொண்டு வருகிறோம். ஆனால் ஒரு சிலருடன் நாம் அத்யந்தமாகப் பழகவேண்டியிருக்கிறது. அவர்கள் அத்தனை பேர்களிலும் எவன்

நல்லவன், எவன் தீயன் என்று நிர்ணயிப்பதற்குள் நமக்கு போதும் போதும் என்ருகி விடுகிறது. ஆனல் அவர்களை நாம் விலக்கி வைக்க முடிய வில்லை. அவர்களுடன் மனம் விட்டுப் பழகத்தான் வேண்டியிருக்கிறது. இதை ஒன்றியே தான் வெற்றியோ தோல்வியோ மயிரிழையில் ஊசலாடு கிறது!"

"சந்துரு, ஏன் இப்படிப் பேசி என்னைத் திகைக்க வைக்கிருய்?" என்று கேட்டான் கபாலி.

"உன்னைத் திகைக்க வைக்கவில்லை. உலகில் அன்ருடம்நடக்கும் சம்பவங்களின் வைபவத்தையும் விநோதத்தையும் சாங்கோபாங்கமாக படம் பிடித் துக் காட்டுவதுபோல் எடுத்துக் காட்டுகிறேன். நாம் தினம் சந்திக்கும் அனைவர்களிலும் ஒரு வன் தான் தீயன். அவனை முன்யோசனையுடன் தெரிந்து பொறுக்கி எடுத்து, அவன் சினேகிதத் தைக் கத்திரித்துக் கொள்வதே, பல விபத்துகளி னின்றும் நம்மை நிச்சயம் காக்கிறது."

"அதனல்?"

"ஒன்றுமில்லை. பேச்சுக்குச் சொல்ல வந் தேன். உதாரணமாக மோஹனையே எடுத்துக் கொள்."

"மோஹனு? அவன் மகா சாது. பலக்கப் பேச மாட்டான். யாருடனும் சுமுகமாகப் பழகி வருகி ருன். நல்ல கலைஞன். படிப்பாளி. தானுகவே கட் டுரைகள் வேறு எழுதியிருக்கிருன்."

"அதனல்தான் அவனை உதாரணமாக எடுத் துக் கொள் என்றேன். பசுத்தோல் போர்த்திய இவன் போல எத்தனை அயோக்யர்கள் உலகில்

உலவி வருகிறார்கள். அதனால்தான் இவனை உதாரணமாக எடுத்துக் கொண்டேன்.''

“பின் மோஹன் வேஷதாரியா?''

“இணையற்ற அயோக்கியன் என்பதை நேற்றே உணர்ந்தேன்'' என்று சந்துரு கூறியதும் கபாலி பெருமூச்சு விட்டான்.

மஞ்சு சப்தநாடியும் ஒடுங்கியவளாய் சோபாவில் சுருண்டு கிடந்தாள்.

“தவறு'' என்றான் கவி.

“தவறு உன் தீர்ப்பில்தான். அவன் சண்டாளன்; துரோகி. உலகில் ஒரு நிமிஷம் கூட வாழ யோக்யதை அற்றவன். இவன் போன்ற கொடிய தீயர்களை இன்னமும் எத்தனை காலம் அன்னை பூமி தாங்கவேண்டும் என்று நினைக்கையில் என் தலை சுழல்கிறது. என் மனம் எங்கேயெல்லாமோ செல்கிறது.''

“சந்துரு! உலகத்தில் சத்தியத்திற்கும், தூய்மைக்கும் நம்பிக்கைக்கும் இடமே யில்லையா?'' என்று அழாத குறையாக கேட்டான் கவி.

“இவன் போன்ற துன்மார்க்கன் அலைந்து திரியுமட்டும், கலை என்ற போர்வையை போற்றிக் கொண்டு கற்பை அணு அணுவாக, அங்கம் அங்கமாக, அங்குலம் அங்குலமாக சிதைத்து மந்த காச வெறியில் பூரிக்கும் வரை, அங்க வெறியில் திளைத்து ஒரு பாவமும் அறியாத கன்னிகளின் இதழின்னினும் இனிய பரிசுத்தத்தை விலைக்கு வாங்கி கம்ஸ லீலை புரியும் கொடியர்கள் உள்ள மட்டும் உலகில் நிம்மதி ஏற்படவே போவதில்லை'' என்று கர்ஜித்தான் சந்துரு.

"மோஹஹன் கதி?"

"அவனை படத்தினின்றும் விலக்கி விட்டேன். அவனை இனி காணமாட்டேன். அவன் மிதித்த இடம் நரகம். பார்த்த இடம் பாழ்" என்றதும் மஞ்சு பயத்தில் துடித்தாள்.

"சந்துரு! பின் உன் படத்துக்கு கதாநாயகன் யார்?" என்று கேட்டான் கவி.

சந்துரு சரேலென்று எழுந்தான். கபாலி உட்கார்ந்திருக்கும் ஸோபாவை அணுகி மண்டி யிட்டு உட்கார்ந்தான். கவியின் பதறும் கைகளை தன் விரல்களால் பற்றி மூடிக்கொண்டு, தாயை அணுகின சேய் போல் அவனை நோக்கினான்.

"நண்பா! உன்னை நம்பியே இந்தப் படம் பிடிக்க மூர்க்கமாய் முனைந்தேன். சாதாரணப் படமாக இதை எடுக்கவேண்டும் என்றிருந்தால் அன்றே இதைப் படம் பிடித்து தமிழ் நாடெங்கும் திரை யிட்டிருப்பேன். மகா கவிதை பொங்கும் உன் நாடகமும், மஞ்சுவின் அசாதாரண அழகும் பட உலகில் அமர ஸ்தானம் பெற வேண்டும் என்ற லக்ஷியம் ஒன்றே என் கண் முன் நிற்பதால் 'நேரமானாலும் பரவாயில்லை; நமக்கு வேண்டியது வெற்றி' என்று துணிந்துதான் மோஹனையும் விலக்கி விட்டேன்."

"சந்துரு, நான் கேட்ட கேள்விக்கு பதில் கூறாமல், ஏதோ பேசிக்கொண்டே போகிறாயே?" என்றான் கபாலி.

"கபாலி! எந்த ஆர்வம் என்னை இந்த சேவையில் தூண்டியதோ, அது உன்னிடமிருந்து மற்

ளுரு தியாகத்தையும் எதிர் பார்க்கிறது'' என்று கண்களில் நீர் பொங்கக் கேட்டான் சந்துரு.

கபாலி நண்பன் கண்களைத் துடைத்து விட்டு "பைத்தியமே! உனக்கு இல்லை என்று கூற என் உயிர் உள்ளமட்டும் எனக்கு துணிவில்லை. என்ன வேண்டுமானாலும் கேள்; என்னால் முடிந்தால் மறுக்காமல் சம்மதிக்கிறேன்'' என்றான்.

சந்துரு பேச எத்தனித்தான். வார்த்தைகள் அவன் தொண்டையில் சிக்கிக் கொண்டன. சில வினாடிகள் கழிந்தன.

''சந்துரு! நீ என்னிடமிருந்து எதிர்பார்க்கும் தியாகம் உன்னை ஊமையாக்குவதாயிருந்தால், எனக்கு இப்போதே பயமாயிருக்கிறது'' என்று கூறிச் சிரித்தான்.

"கபாலி, நீ உத்தமன். உன் தூய மனதை நான் நன்கறிவேன். கபாலி! நானே உன் நாடகத்தில் கதா நாயகனாக நடிக்கலாம் என்றிருக்கிறேன். உனக்கு ஆக்ஷேபணையில்லையே'' என்று கேட்டான் டைரக்டர் சந்துரு.

மின்சாரம் பட்டதால் தாக்குண்டவன் போல் கவி உன்மத்தனானான். நெடுநேரமாகியது அவன் சுய அறிவுபெற. அதை மீண்டும் பெற்றதும் தன் முன் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும் நண்பனைத் தன் கண்களால் அகல விழித்து நோக்கினான். அந்தப் பார்வையில் ஆச்சரியமும் கலவரமும் துக்கமும் அலைமோதுவதைக் கண்டு அயர்ந்து விட்டான் சந்துரு. மஞ்சுவை நோக்கினான். அருணையத் துக்கு முன் இதழ்களை இருளிடம் பதிய வைத்திருக்கும் தாமரை மொட்டுபோல் அவள் சௌந்தர்ய முகம் சுருங்கியிருந்தது. சொல்லொணா அதிர்ச்சியும் கண்ணோரத்தில் தேங்கிக் கிடந்தது.

கவியின் உள்ளம் உணர்ச்சிப் பீடமாக மாறிற்று. இந்த எதிர்பாராத உபகாரத்தை சந்துரு விடமிருந்து கபாலி ஒரு நாளும் எதிர் பார்க்கவில்லை. தான் எழுதிய நாடகம் பேசும் படமாக வரப்போகிறது என்று அறிந்ததும் அவன் மகிழ்ச்சி அடைந்தான். தன் மனைவி அதன் கதாநாயகியாக நடிக்கப் போவதற்கு அவன் அதிக வேதனைக்குப் பின்னரே ஒரு சமாதானத்தை தானாகவே தேடிக்கொண்டான். ஆனால் சந்துருவின் இந்த எதிர்பாராத வேண்டுகோள் அவன் மனதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. மோஹனுடன் தன் மனைவி நடிக்கவும் சம்மதமளித்த அவன் கவிதா உள்ளம், தன் ஆருயிர் நண்பன் சந்துருவுடன் நடிக்க அனுமதி தர சஞ்சலப்படுவதைக்கண்டு அவனுக்கே ஆச்சரியமாகயிருந்தது. மனித எண்ணம்தான் எத்தனை வினோதமானது. ஊர் பெயர் தெரியாதவனுடன் நெருங்கிப் பழகி திரையில் அவன் நாயகியாகவும் மாறக் காண்பதை சம்மதித்த மனம், ஏன் இப்படி மருட்சி அடைகிறது என்பதை அவனால் உணரவே முடியவில்லை.

நண்பனை நோக்கினான்.

மனைவியை நோக்கினான்.

ஒரு தீர்மானத்திற்கும் சடுதியில் வர முடியாதவன் போல், சரேலென்று எழுந்து ஜன்னலை அணுகி வெளியே நோக்கினான்.

சந்துரு அவனை தொடர்ந்து அவன் தோள் மீது தன் கரத்தை பொருத்தி, "கபாலி! உனக்கா என்மீது சந்தேகம்? நான் மஞ்சுவை என் உடன் பிறந்த சகோதரிக்கு மேல் பாவித்து

வருகிறேன். இது சத்தியம். என்னை நம்பு. இன்று நேற்று நான் உன்னுடன் பழகி வருபவன் அல்ல. அவள் கற்புக்கு பங்கம் ஏற்படாமலிருக்க நான் ஜவாப்தாரி என்று அன்றே உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். நம் போறாத காலம். மோஹனின் மனம் விகாரம் அடைந்தது. அவனை அகற்றிவிட்டேன். அவன் பாகத்தை உணர்ந்து நடிப்பது மிகவும் கடினம். இனி வேறு ஒருவனைப் பொறுக்கி எடுத்து அவனுக்குத் தேர்ச்சி அளிப்பது சுலபமான காரியமல்ல. எல்லாவற்றையும் முன்னரே யோசித்த பின்னரே இந்தத் தீர்மானத்துக்கு வந்தேன். கபாலி, நீ கவி! உன் மனம் கோணமல் நடக்க நான் உறுதி கூறுகிறேன். இது போதாதா?" என்று தாழ்ந்த குரலில் கெஞ்சினன் சந்துரு.

கவியின் ஹிருதயம் இளகி விட்டது. நண்பனைத் தழுவிக்கொண்டு, "உன் இஷ்டப்படியே செய்" என்ருன்.

மஞ்சுவின் கண்களினின்றும் இரு நீர்த்துளிகள் உதிர்ந்தன.

6

காதலின்பத்தை பல கட்டங்களில் சிதறவிட்டிருந்தாலும், ஒரு மகத்தான தத்துவத்தை நாடகரூபத்தில் பறை சாற்றவே, "புயலுக்குப் பின்" என்ற நாடகம் கபாலியின் உள்ளத்தில் உதித்தது. அதில் தோன்றும் கதாநாயகனுக்கு கதாநாயகி காஞ்சனைமீது முதன் முதலில் ப்ரேமையே இல்லை. ஆனால் அவளோ காதல்தீயில் உருகி அவன் மனதை மாற்ற அரும்பாடு படுகிறாள். சேனாதிபதி அவள்மீது கொண்ட ஆவேசக் காதலை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு கொடியில் தன் பெண்புத்தியை சாமர்த்தியமாக உபயோகித்து, அவன் மனதையே திருப்பிவிடுகிறாள். கதாநாயகனின் தந்தையோ விருத்தாப்பியன். ஒரு இடத்தை விட்டு அகலவும் சக்தியற்றவன். காஞ்சனைமீது பச்சாதாபம் கொண்டு, அவளை அவன் அன்போடு வளர்த்து வருகிறான். அவள் மனம் கதாநாயகன் விஜயனையே நாடுகிறது. வெற்றியும் அடைகிறாள்.

இதுதான் கதையின் சாராம்சம். ஆனால் அதில் இருக்கும் தத்துவம்தான் கற்பனையின் சிகரமாக நாடகத்தில் ஜ்வலிக்கிறது.

ஒரு புயல் வீசும்தோறும் கதாநாயகனின் தந்தை கிழவனின் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்படுகிறது. ஒரு பயங்கரப் புயல் வீசி ஓயுமுன் குழந்தை விஜயனும் பிறக்கிறான். அவன் மனைவியும் இறக்கிறாள். இந்த இரட்டைச் சம்பவம் அவன் மனதில் தழும்பேறி நிற்கிறது. புயலைக் கண்டாலே அவன் குலை நடுங்குகிறான். அந்த வார்த்தையே அவனைப் பயமுறுத்துகிறது. விஜயனை கண்ணிமைபோல் வளர்த்து வருகிறான். அவனும் யுவனாக வளர்ந்துவிட்டான். புயல் வீசு

கிறது. அதைக்கண்டு பதைபதைக்கிறன் கிழவன். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தனக்கு என்ன நேர்ந்துவிடுமோ என்று நடுங்குகிறன். கதவு தட்டும் சப்தம். வெளியே ஒரு பெண்ணின் பரிதாபகரமான குரல். கதவைத் திறக்கிறன. அனுதை காஞ்சனை உள்ளே வருகிருள். அடைக்கலம் புகுகிருள். அவளைக் கண்டவுடன் இரக்கமும் பயமும் கிழவனை மாறி மாறிக் குலுக்குகிறது. மனதை ஒருவிதமாக சமாதானப் படுத்திக்கொண்டு அவள் தன் வீட்டில் இருக்க சம்மதிக்கிறன். அனுதாபம் அன்பாக மாறுகிறது. முறுக்கேறுகிறது. அதன் பின் அவளை விட்டு ஒரு நொடியும் பிரிந்திருப்பதே பகீரதப் பிரயத்தனமாகவும் மாறிவிடுகிறது. விஜயன் கவி. காஞ்சனை அற்புதப் பாடகி. கேட்கவும்வேண்டுமா! காவிய கங்கையும் கலாயமுனையும் கர்ஜித்து சங்கமமானுல்? அவளைக் கண்டு விஜயன் பூரித்துப் போகிறன். அழகைக் கண்டல்ல; அவள் எழில் தெரிக்கும் கலையைக்கண்டு, களிமயில் போல். ஆனுல் அவளோ அவனை நினைந்து நினைந்து உருகுகின்றுள். சேனுதிபதியின் காதல் அவள் உறுதிக்கு வலிமை ஊட்டுகிறது. உயரிய பெண்மை ஒரு வழி தேடுகிறது. விஜயன் மாறுகிறன். அவளை இழக்க, அவமதிக்க, அவன் கவி மனம் சம்மதிக்குமா?

அந்தத் தருணத்தில்தான் புயல் வீசுகிறது, பயங்கரமாக, அலங்கோலமாக மூர்த்தண்யமாக. காதலர்கள் கண் காணுத தேசத்திற்கு ஓடி விடுகிருர்கள். கிழவன் பதறுகிறன். ஓட வழியில்லை. மனம் அலறுகிறது. எண்ணம் கொதிக்கிறது. உடல் அக்கினிக் குண்டம்போல் கொதிக்கிறது. வெளியே புயலின் வீச்சு குளுமையை வாரி வாரி

இறைத்தாலும் சுடர் கடுமையில் ஜ்வாலையின் உள்ளம் ஜில்லென்றிருப்பது போல்.

ஒரு கீதம், உலகத்தின் சோகத்தையே வாரித் திரட்டி எடுத்து வந்தது போல், அவன் உள்ளத்தினின்றும் பீறிக்கொண்டு பிறக்கிறது.

வீசி அடித்திடு புயலே
கைகொட்டி ஆர்த்திடு புயலே
நேசம் மறந்திட்ட மகனும்
நன்றி மறந்திட்ட மகளும்
பாசம் நிறைத்திட்ட மனதை
நாசமாய் குதறிய கதையை
வீசி பகர்ந்திடு புயலே!
கர்ஜித்து முழங்கிடு புயலே!

இந்தக் கவிதையை எழுதிய மறுகணம், கபாலியின் கண்களினின்றும் கண்ணீர் ஆறாகப் பெருகத் தொடங்கியது. ஒரு முறைக்கு ஆயிரம் முறை அந்த சோக கீதத்தை உரக்கப் படித்தான். படிக்கும் போது ஒவ்வொரு முறையில் ஒரு புது உணர்ச்சி பிறந்து அவனைக் குலுக்கியது. கிழவனுக்கு ஏற்பட்ட கதி, துர்ப்பாக்கிய நிலைமை, விதியின் நீதியற்ற தீர்ப்பு, தனக்கும் ஏற்பட்டு விடுமோ என்று அவன் நடுநடுங்கினான்.

மஞ்சு காஞ்சனை; சந்துரு விஜயன்; மோஹன் புயல் போல் வீசி அவர்கள் சாந்த வாழ்வில் புரட்சியைப் புதைத்து விட்டான். அந்த புரட்சியின் தீங்கரம் அவனை எல்லையற்ற சூழ் நிலையில், கரை காணமுடியாத அந்தகாரத்தில், மார்க்கம் மறைந்த ககனத்தில் இழுத்துச் செல்வதாக நினைத்தான். அந்த நினைவு அவன் மனதில் பயங்கரத்தை விதைத்தது. அவன் உண்மைக்கவி, வாழ்க்கைக்

கவி, அசாதாரண கவி. உணர்ச்சி ஒன்றிலேயே தன் வாழ்நாள் முழுவதையும் கழித்துவரும் அவனுக்கு, எந்த விஷயத்தையும் நிதானமாய் ஆராயவேண்டிய போதிய பொறுமையில்லை. அவன் உள்ளம் உணர்ச்சி பாஷை ஒன்றையே அறியும். நாடகத்தில் கிழவனை உதறித் தள்ளிச் சென்ற காதலர்கள் போல், மஞ்சுவும் சந்துருவும் தனக்கு துரோகம் செய்து விடுவார்களோ என்று அவன் நெஞ்சம் அஞ்சிற்று. புறாவின் வெள்ளை மார்புபோல் அவன் உள்ளம் பட பட்த்தது.

குழந்தைபோல் தன்னை கட்டித்தழுவி முகத்தோடு முகம் புதைத்து, தன் வாயை செவ்விதழ்களால் மூடும் மஞ்சுவைக் கண்டவுடன் கபாலி முதலில் திகைத்து போய்விட்டான். எவள் மீது அவன் மனம் சந்தேகத்தை வளர்த்ததோ அவளே தன்மீது படர்ந்து ஒரு தெள்ளிய அமுதை வாயிலிட்டு புளகாங்கிதப்படுத்துகிறாள் என்றறிந்ததும் அவன் எண்ணத்தில் மண்டிக் கிடந்த பேய்க்கூட்டம் காற்றாகப் பறந்து ஓடிற்று.

"மஞ்சு! என் கண்ணே!" என்று கூவி அவளை இறுகத் தழுவினான்.

"ஏன் ஏதோ மாதிரி இருக்கிறீர்கள்?" என்று வெள்ளை மனதுடன் கேட்டாள் மஞ்சு.

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாமலேயே இந்தக் கோபமா? ஏதாவது ஒன்று நேர்ந்து விட்டால் மாறுதல் எப்படியிருக்கும் என்று கற்பனை காண்பதுகூட கடினம் போலிருக்கிறதே" என்று கூறி விளையாட்டாகச் சிரித்தாள்.

"மஞ்சு! நீயா இப்படிப் பேசுகிருய்? சாமர்த்தியசாலியாகி விட்டாயே?"

"இல்லை, உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் பேசாமடந்தையாக இருக்கிறேன். சம்மதமா?" என்று பளிச்சென்று கேட்டாள்.

அவள் கன்னத்தில் லேசாக தட்டிவிட்டு, "ஏம்மா! படம் பிடிப்பு எத்தனை தூரத்திலிருக்கிறது?" என்று கேட்டான்.

"நீங்கள்தான் அதை பகிஷ்காரம் செய்து வருகிறீர்களே. உங்களுக்கு ஏன் சிரத்தை வரப் போகிறது?"

"பார்த்தாயா? சொன்னுல்மட்டும் கோபித்துக் கொள்கிருய். உன்னை விஷமக்காரி என்று சொன்னுல் கோபம் மட்டும் பிரமாதமாக வந்து விடுகிறது."

"அது சரி? இன்று ஷூட்டிங்குக்கு வருகிறீர்களா?"

"இன்ரு? யோசித்துச் சொல்கிறேன். காவியத்தில் எழுநூறு வரிகள் எழுதிவிட்டேன். பாக்கி கொஞ்சம்தான் இருக்கிறது. சரி, வருகிறேன். பொழுது போக்காகத்தான் இருக்கட்டுமே" என்று கூறி அவளுடன் ஸ்டூடியோவுக்கு வரும் சம்மதத்தையும் தெரிவித்தான்.

மஞ்சு உண்மையிலேயே சந்தோஷப்பட்டாள். தன் கணவனுடன் செல்வதென்ருல் தனிப் பெருமை அல்லவா? அன்று அழகான புடவையாகப் பொறுக்கி எடுத்து தன்னை மிகவும் வசீகரமாக

அலங்கரித்துக் கொண்டாள். அவள் டிரஸ் பண்ணிக் கொண்டு "நான் தயார்" என்று சொல்லிக் கொண்டே மாடிப்படியினின்றும் இறங்கி வரும் போது, அவள் காற்றில் மிதந்து வரும் பூச் செண்டு போல் தோன்றினுள். கவியோ பிரமித்துப் போனன்.

இருவரும் மோட்டாரில் ஏறிக்கொண்டு ஸ்டுடியோவை அடைந்தனர்.

கபாலிக்கு எல்லாம் திகைப்பாகவே இருந்தது. இயற்கைக்கு விரோதமாக எத்தனை தூரம் விலகி இருக்கவேண்டும் அத்தனை முயற்சிகளும் அங்கே சங்கோபாங்கமாக காக்ஷி அளிப்பதைக் கண்டு, அவன் ஆச்சரிய மடைந்தான். தகரக் கொட்டகைக்குள் மாளிகையும் பிரம்மாண்டமான கோயில்களும் பதுங்கிக்கொண்டு இருளில் தவம் கிடப்பதைக் கண்டு, அவனுக்கு அவனை மீறி சிரிப்பு வந்துவிட்டது. மண் பூசிய மரங்களும், காற்றில் அசையும் காடும், அட்டை வீடுகளும், மரக்கத்திகளும் அவனை எங்கேயோ இழுத்துச் சென்றன. திரையில் காணப்படும் கனவு உலகங்கள் இதனின்றும் சிருஷ்டிக்கப் படுகின்றன என்ற உண்மை அவன் மனதில் ஞானேதயம் போல் பாய்ந்ததும், அவனுக்கு ஒரு பிரமிப்பே தட்டியது. கோடி சூர்யப் பிரகாசமுள்ள வெளிச்சங்கள் திகழ்வதும், அணைவதும் அவனுக்கு மர்மமாகத் தோன்றின.

'ஏன் கபாலி! இது என்ன புதுமை?" என்று யாரோ ஒருவன் தன் முதுகைத் தட்டியதும் அவன் சிந்தனை கூடு கலைந்தது.

"நான்தான், கபாலி." என்று சந்துரு கூறியதும் ஒரு அசட்டுச் சிரிப்பை சிரித்துவிட்டு, "என்ன

டைரக்டர் ஸார், நான் உள்ளே வந்தது தவறில்லையே?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான் கபாலி.

“பேஷ்! உபசாரப்பத்திரம் நீ வந்தவுடன் வாசிக்க வில்லையே என்ற குற்றத்தை என்மீது சாட்டப் பார்க்கிருயா? அது நடக்காது ஸ்வாமி, இந்த இடத்தில்'' என்ருன் சந்துரு.

“ஷூட்டிங்குக்கு நாழியாகுமோ?'' என்று கேட்டான் கவி.

“பொறு! பொறு. நீயும் வந்துவிட்டாய். கொஞ்சம் பொழுது போக்காக எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கலாமே!" என்று கூறி அவனை அழைத்துச் கொண்டு “ஸெட்'' எல்லாவற்றையும் அவனுக்குக் காண்பித்தான். அங்கு நிற்கும் பிரம்மாண்டமான காமிராக்களையும், மெஷின்களையும் காண்பித்து அவைகளைப் பற்றி விரிவாக அவனுக்கு எடுத்துக் கூறினன். படப்பிடிப்பின் நுணுக்கங்களை சந்துரு கூறும்போது, கபாலிக்கு எல்லாம் ஆச்சரியமாயிருந்தது.

“மனிதனின் மூளை எப்படி யெல்லாம் வேலை செய்கிறது பார்!" என்று பூரித்துச் சொன்னன் கவி.

“இது ஒரு பிரமாதமா? ‘புயலுக்குப் பின்' என்ற அற்புத நாடகம் உதித்த விந்தையை விடவா? '' என்று சந்துரு கண்ணைச் சிமிட்டிக் கொண்டு கூறியதும், கவி சொப்பன உலகில் மீண்டும் ஆழ்ந்து விட்டான்.

கபாலியின் கரங்களை பற்றியபடி, அங்கு நின்று கொண்டிருக்கும் அனைவருக்கும் ஒரு புகழுரையை

முதலில் ஒட்டி, அறிமுகப்படுத்தவே நிஜமாகவே கபாலியின் உச்சி குளிர்ந்து விட்டது. தன்னை நூற்றுக்கணக்கான பேர்கள் அதிசயப் பார்வையுடனும் பயபக்தியுடனும் இதுவரை நோக்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிட்டியதேயில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் அவன் நாடகத்தில் மிளிரும் மகோன்னத தத்துவத்தைப் பற்றி பத்தி பத்தியாகப் புகழ ஆரம்பித்ததும் கபாலி தன்னையே மறந்தான். மணிக்கணக்காக அவர்கள் கூறுவதை சலிக்காமல் கேட்டு பரமானந்தம் அடைந்தான். தன் பக்கத்திலிருந்த சந்துரு தன் வேலையாக அப்புறம் நகர்ந்ததையும் அவன் கவனிக்கவில்லை. தேனுண்ட வண்டுபோல் நிலைகுத்தி நின்றுவிட்டான்.

"மிஸ்டர் கபாலி! நான் பெருமைக்குச் சொல்ல வரவில்லை. காஞ்சனையின் பாத்திரத்தை உணர்ச்சியுடன் நடிப்பது மிகவும் கடினம். பாட்டுக்கேற்ற அழகும், அந்த அழகுக்கேற்ற முக பாவமும், அந்த பாவத்துக்கேற்ற கொஞ்சும் குரலும் படைத்த உம் பத்தினி, அமர நடிகையாக மாறி விட்டாள். சந்துருவும் அதி அற்புதமாக தம் பாகத்தை நடித்திருக்கிறார். உம்முடன் நெருங்கிப் பழகி வருவதால், அவர் தத்ரூபமாய் கவியின் பாகத்தை நடித்துக் காண்பிக்கிறார். மஞ்சுவின் சௌந்தர்ய கீதம், சந்துருவின் உன்னத நடிப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக உம் அபாரமான நாடகம், இத்தனையும் ஒரு பொழுதும் சேர்ந்து அமைந்ததில்லை. இன்று தான் ஒரு அபூர்வ கட்டம் எடுக்கவேண்டும். நீங்கள் தான் இருக்கிறீர்களே. நேரில் கண்டு ஆனந்தப்படுங்கள்!" என்று உதவி டைரக்டர் கூறியதும், கபாலி பெருமை அடைந்தான்.

"அது என்னவோ மிஸ்டர்! நம்பினல் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள். நடிப்புத் திறனும் மஞ்சுவோடு உடன் பிறந்ததோ என்று நுங்கள் சந்தேகிக்கிறேம்" என்று ஒரு அனுபந்தம் ஒட்டிவைத்தான் உதவி டைரக்டர்.

"அப்படியானல் நாம் உள்ளே போகலாமே!" என்ருன் கவி.

"ஆக்ஷேபணையின்றி."

ஸெட்டை சீக்கிரமாகவே அடைந்தார்கள்.

ஒரு மங்கலான வெளிச்சம் மட்டும் தெரிந்தது. ஒரு நாற்காலியில் அமர்ந்தான் கவி. தன்முன் பலர் நிழல் போல அங்குமிங்கும் நடமாடுவதையே அவனல் காணமுடிந்தது. சற்று தூரத்தில் ஒரு மேடையில் ஒரு பெண் அனயாசமாகப் படுத்திருப்பதாக அறிந்தான். அவன் அருகில் ஒருவன் நிற்பதும் அவனுக்குப் புலப்பட்டது.

எங்கும் திடீரென்று மௌனம் நிலவியது.

"டேக்!" என்ற சப்தம்.

மறு விநாடி ஒரு ஜாஜ்வல்ய ஒளி செட் மீது விழுந்தது.

அந்த பளிச்சிடும் ஜோதியில், மஞ்சு ஒரு மஞ்சத்தில் படுத்திருப்பதையும், அவள் அருகே சந்துரு ஒய்யாரமாக நிற்பதையும் கண்டு கபாலி பதை பதைத்தான். மறு கணம் என்ன நடக்கப் போகிறது என்று அறிய அவன் உள்ளம் தவியாகத் தவித்தது.

சந்துரு அவன் மனைவியை ஆவலே உருவாக நோக்குவதும், அவள் அவன் எண்ணத்தில் குழு

றும் காதல் வெள்ளத்தை தன் அகண்ட விழிக ளில் பிரதிபலிப்பது போல் காதல் நோயில் நலிவுற்றுப் பார்ப்பதையும் கண்டு, பதறிப் போனுன் கவி.

பின்னர் நடந்த சம்பவம் அவனை எல்லையற்ற ககன மார்க்கத்தில் விசிறி எறிந்து நக்ஷத்திர அக்னி குண்டங்கள் ஒவ்வொன்றிலும் நிதான மாகத் தோய்த்துத் தோய்த்து எடுப்பது போலிருந் தது.

கபாலி கண்களை அகல விழித்த வண்ணம், தன் கண்முன் நடைபெறும் காதல் நாடகத்தை வெறித்து நோக்கினுன்.

சந்துரு மஞ்சுவை தன் இரு கைகளாலும் அணைத்து, அவளது துடிக்கும் உதட்டின்மீது தன் அதரத்தை பதித்து, அவள் அழகையே உரிஞ்சிவிடுவது போல் முத்தம் கொடுப்பதை தன் கண்ணுலேயே கண்டான்.

மறு க்ஷணமே மின்சாரத்தால் உதறித் தள்ளப்பட்டவன் போல் மூர்ச்சையானுன் கபாலி.

ஆனல் மஞ்சத்தில் இதழோடு இதழ் பதிந்து கிடந்தது.

# 7

மூர்ச்சை தெளிந்து கபாலி எழுந்ததும் அவன் அண்டையில் சற்று இருட்டாகவே இருந்தது. ஆனல் அவன் மனதில் குவிந்திருந்த இருளோ அவனை ஆயிரம் சூருவளியின் வேகத்தில் அவன் எண்ணங்களைச் சுழற்ற ஆரம்பித்தது. சுற்றிப் பார்த்தான்.

இதழோடு இதழ் பதிந்த வண்ணம் இருப்பதைப் பார்த்து ஆவேசம் வந்தவன் போல் எழுந்தான். அன்று திரிபுரத்தை சம்ஹாரம் செய்யும் தருணத்தில் திறந்த சிவபெருமானின் நெருப்புப் பார்வை தனக்கும் இருந்தால் எத்தனை உபயோகமானது என்றே அவன் எண்ணினன். பொங்கி எழும் சீற்றத்தில் மஞ்சுமீது பாய்ந்து அவள் கழுத்தை அறுத்துக் கொன்று விடலாமா என்று அவன் கைகள் துடிப்பதை அவன் அறியாதவனல்ல. ஆனல் ஆத்திரத்தில் உதிக்கும் செய்கை அகோரமாகவே முடியும் என்று கருதி, தன் கண்முன் நடைபெறும் அலங்கோலமான காக்ஷியை நொடியும் காணச் சகியாதவனய், அந்த இடத்தைவிட்டு சரேலென்று எழுந்து வெளியே வந்தான். ஸ்டுடியோ வாசற்படியையும் தாண்டினன். தெருவையும் அடைந்தான்.

ஒரு அடி எடுத்து அப்புறம் வைக்கலாம் என்ருலோ கால்கள் தடுமாறின. நெஞ்சம் படபடத்தது. உடல் முழுவதும் உதறியது. தள்ளாடித் தள்ளாடிச் சென்று ஒரு கல்லின்மீது சாய்ந்து கொண்டான்.

வெகு தூரத்தில் ஒரு ஆந்தை அலறுவது அவன் காதில் விழுந்தது. அதன் தொனியில்

தான் எத்தனை சோகம்; தனிமை; பயங்கரம். தன் இன்னலின் எதிரொலியென அவனுக்கு அதன் குரல் பட்டது.

வானத்தை நோக்கினன் கவி.

எண்ணற்ற நக்ஷத்திரங்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. ஓய்ச்சலின்றி கண்ணைச் சிமிட்டிய வண்ணமிருந்தன.

சீ! என்ன உலகம்! நம்பிக்கைக்கு எத்தனை கடுமையான சோதனை!

தன் ஆருயிர் மஞ்சுளா லவலேசமும் லஜ்ஜையின்றி, சிறிதேனும் மறுப்பின்றி, எத்தனை கள் வெறியுடன் தன் நண்பன் சந்துருவின் ஆலிங்கனத்தில் மெய்மறந்து கிடந்தாள். அவனை எத்தனை ஆவேசத்துடன் இறுகத் தழுவினுள். தன் உதட்டை ஈந்தாள். உடலையே தந்தாள்.

கபாலியின் உடல் அக்னிக் குண்டம் போல் தகித்தது.

தான் பார்த்தது கனவாயிருக்கலாமோ என்று ஒரு கனம் நினைத்தான்.

சீ. என்ன எண்ணம்! அது கனவில்லை! நூறு பேர்கள் மத்தியில் தன்னைத் தொட்டு தாலி கட்டிய கணவன் முன்னிலையில், ஜோதியின் எதிரில், பிற புருஷனுக்கு எத்தனை லாவகமாக தன் உதட்டையும் உடலையும் அவன் அன்பின் காணிக்கையாக, அவன் காதல் அவள் அங்கங்களை அணுஅணுவாக ரஸிக்க ஆர்வத்துடன் ஈந்தாள்.

மஞ்சுவின் மீது தான் கொண்டிருக்கும் காதலுக்கு இத்தனை மகத்தான முற்றுப்புள்ளி சந்

துருவின் செய்கை — மன்னிக்க முடியாத இதழ் கட்டம் — புரியும் என்று அவன் கனவிலும் நினைத் தவனல்ல.

அது மட்டுமா ?

அவர்கள் திரைக் காதலையும், அவன் பட்ட வேதனையையும், அவனுடைய பச்சாதாபத்தை யும், அவளை அவன் வாரி எடுத்து காதலின் இன் பத்தில் ஆழ்த்திய ஆபாசக் காக்ஷிகளையும், நாளை நாடெங்கும், நகரமெங்கும், தியேட்டர் எங்கும் திரள் திரளாக அணை உடைந்த வெள்ளம் போல திரண்டு வரும் கோடிக்கணக்கான தமிழ் மக்கள், யுவர், யுவதிகள், முதியோர், பாலர், அனை வரும் கண்டு களித்துத் திரும்புகையில், திருப்தி யுடன் திரும்புவார்கள். மனதில் தோன்றிய தீர்ப்பை வாய்க்கு வந்தவாறு வாரி வாரி இறைப் பார்கள். அந்தக் கொடுமைகளை கர்ண கொடூரங் களை, அவியல் தீர்ப்புகளை, அவன் செவிகள் கேட்காமல் தப்ப முடியுமா ?

மஞ்சுவை நெருங்கும்போது, சந்துருவின் கண் களில்தான் என்ன ஆவேசம் ! என்ன ஆழ்ந்த வெறி ! என்ன விரிந்த துடிப்பு! கலை கலை என்று கூறிக்கொண்டே அவன் வஞ்சக உள் ளம் இந்த நஞ்சை ஒரு வேளை வளர்த்திருந் தால் ? ஏன் இருக்கக்கூடாது ? அவன் கலைப் போர்வையின்கீழ் புலிப் பாய்ச்சல் பாயும் எண் ணம் ஏன் தருணம் பார்த்து தாமதித்து இருந் திருக்கக் கூடாது ? மோஹன்மீது பழி சுமத்தி தன் குணத்திற்கு புது மெருகு தீட்டிக் காண் பித்து, மஞ்சுவை வசீகரிக்க இதுவும் ஏன் ஒரு ஜோடனையாக இருந்திருக்கக்கூடாது.

சீ ! என்ன உலகம் !

தன்மீது ஆயிரம் வாஞ்சை வைத்து தன்னைக் குழந்தைபோல் பாவித்துவரும் மஞ்சுவுக்கு இந்த மாறுதல் வரும் என்று அவனுல் சிந்திக்கவும் முடியவில்லை. எத்தனை அன்புடன், எத்தனை ஆவேச ஆவலுடன், எத்தனை கட்டுமீறிய ப்ரேமையுடன் மஞ்சு அவனை அணுகுவாள். ஆழந்தெரியாத இன்பத்தில் ஆழ்த்தி, அவன் கற்பனைக்கும் வாழ்க்கைக்கும் புது சோபை தீட்டுவாள்.

மஞ்சுவும் சந்துருவும் சதி செய்து தன் வாழ்வைக் குலைக்க ஜோடித்த திட்டம்தான் இதுவோ என்று அவன் கவிதா உள்ளம் கலங்கி எண்ணத் துணிந்தது.

பக்கத்தில் கிடக்கும் கல்மீது அவன் கை சென்றது. அதை எடுத்து தன் காலால் உதைத்தான். அது கல்லாகவே இருந்தது. பெண்ணுக மாறவில்லை! கவியின் கால்பட்டு கல்லும் பேசவில்லை.

மறுகணம் அவன் மனக்கண்முன் அகல்யையின் சோக உரு எழுந்தது போலிருந்தது. அவன் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது.

காலைக்கு விழிப்பு ஏற்பட நெடுநேரமிருக்கிறது. கட்டழகி அகல்யா தூக்கத்தின் நெஞ்சாழத்தில் அமிழ்ந்து கிடக்கிருள். காமக் கோழி கூவிற்று, அங்க சங்கமம் பெற; அணங்கை அணு அணுவாக ரஸிக்க. மாமுனி மருண்டு எழுந்தான். கலக்கமும், விதியின் மயக்கமும் அவனை ஆற்றங்கரைக்கு விரட்டிவிட்டது. குடிசையின் கதவை மூடாமல் சென்று விட்டான் முனிவன்

மூதற்குற்றம். ' காம முனி ' அடிமேல் அடி வைத்து உள்ளே வருகிறான். அழகி துயில்கிறாள். எத்தனை வருஷமாக தன் ஹிருதய தாகத்தை தணிக்க தவியாகத் தவித்து வந்தானோ, தேவற்கு முதல்வன். அகலிகையை அணுகுகிறான். அவள் துயிலைக் கலைக்கிறான். அவள் துயில் கலைகிறது. தூக்கத்தில் புரண்டு கொடுக்கிறாள். கள்வனின் உள்ளமும் புரள்கிறது. பாபி பரிசுத்த உடலைத் தீண்டினான். உடலோடு உடல், இதழோடு இதழ்; இன்பத்தின் சிகரத்தை நொடியில் கைப் பற்றுகிறான். ஆனால் அவள் இன்னமும் கன்னி....பத்தினிப்பெண்....கன்னித்தெய்வம். மது சிதறுவதற்கு முன் அங்கே தோன்றிவிட்டான் முனி. மனைவியின் கன்னிப் பருவத்துக்குதான் பங்கம் ஏற்பட்டது. அவள் பெண்மை பூரிக்கவில்லை. அணு அளவும் குலையவில்லை. முனியின் சீற்றம், சாபக் கேடு. அகலிகை சிலையானாள். தூக்கமும், வஞ்சமும், சீற்றமும், கலந்து ஜோடித்த சதியின் சண்டாள விளைவு !

குற்றவாளி யார்?

தூக்கமா ?

வஞ்சகமா ?

சீற்றமா ?

மாமுனியைக் குழப்பிய சினம் கபாலியைக் கலக்கியது.

கன்னித் தெய்வத்தை கல்லாக்கிய முனியைக் கடிந்து கொண்டு, ' அகல்யா குற்றமற்றவள்; அவளை நீ மன்னித்துத்தான் தீரவேண்டும் ' என்ற தீர்ப்பு அளித்த அயோத்தி ராமன், மாசு

மருவற்ற ஸீதையை அனலிலிட்ட தன் கொடுமை யைப் புரிந்து கொள்ள எத்தனித்தது கவியின் கொதிக்கும் சிந்தனே.

'கல்லே! நீ சொல்லாயோ? மரமே! நீ பகர்ந்திடாயோ? வானமே! நீ வாய்திறந்து பேசமாட்டாயோ? என் வைதேகி எங்கே! என் களி மயில் எங்கே? என் நடமாடும் இன்பம் எங்கே?" என்று கானகமே சிதைய 'ஓ' வெனக் கதறி அழுத ராமன், அரக்கனல் தூக்கிச் செல்லப்பட்டாள் என்ற இடிஓசை காதில் ஒலித்தவுடனே புண்பட்ட சிம்ஹம் போல் சீறி எழுந்து ஒரு பெண்ணுக்காக புவனத்தையே அழிக்க வெகுண்டு எழுந்த புருஷோத்தமன், அவளை மீண்டும் கண்டதும் அக்னியில் வாட்டிய விந்தை என்னதான் என்று அறிய கபாலியின் மனம் மருண்டு எண்ணியது.

மாமுனிக்கு புத்தி புகட்டி ஞானதையம் அளித்த அவதாரமூர்த்தி, தன் விஷயத்தில் மட்டும் ஏன் இந்தத் தவறைப் புரிந்து உலகத்தின் அவதூறையும் வீணுகத் தேடிக்கொண்டான்? விந்தை! அவனுக்கு விளங்காத மர்மமாகத் தோன்றியது.

ஆனல், 'ராவணன் தன் பத்தினியைத் தூக்கிச் சென்றுவிட்டான்; இலங்கையில் இருக்கும் தன் அரண்மனைக்கு அப்புறப்படுத்தி விட்டான்' என்ற செய்தி ராமன் காதில் எப்படி நாராசம் போல் ஒலித்திருக்கும். அவன் மனதை எப்படி எல்லாம் பதற அடித்திருக்கும். அன்னத்தை விட நளினமான நடை போட்டு தன்னை அணுகும் அவள் பறவை உள்ளம் எப்படி எல்லாம் பதறி யிருக்கும். தவிர ஸீதையை எப்படி எல்

லாம் பயமுறுத்தியிருப்பான். எத்தனை துன்பங்கள்! எத்தனை அவதூறுகள்.

கபாலி வானத்தை வெறுப்புடன் நோக்கினான். பெண்களின் உள்ளம் தான் எப்படிப்பட்டது? அதை அறிய கோடிக்கணக்கான மக்கள் அன்றோ மடிந்திருக்கிறார்கள்.

சூர்ய தேவனுடன் நடத்திய கள்ளக் காதலை மறக்க, குந்தியின் தாய் உள்ளம் கல்லாக அல்லவா மாறிவிட்டது. தேர்ப்பாகன் என்று தன் வயிற்றுப் பிள்ளைகளே தன் தலைச்சன் குழந்தையை ஏசும் போது, எத்தனை திடத்துடன், அழுத்தத்துடன், மகத்தான வேதனையுடன் அவள் கண்மூடி மௌனியாய் சும்மா இருந்திருக்கிறாள். மக்களோடு மக்கள் போரிட்டு யுத்தகளத்தில் மாண்டு போகையிலும், அவள் தன் நெஞ்சாழத்தில் அமிழ்ந்து கிடக்கும் அந்தப் பயங்கர உண்மையை வெளியே எடுக்கவில்லை. அவள் பெண்ணுள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்! எப்படித் துடிதுடித்திருக்கும்! வெடித்துப்போன இடைவெளிகளை எத்தனை துணிச்சலுடன் நிர்மலமான பராமுகத்துடன், திரும்பவும் சேர்ந்து ஒட்டி ஒரு பாவமும் அறியாதவள் போல் அவர்களிடையே வாழ்ந்தாள்.

•

ராஜசபையில் துச்சாசனன் பரபரப்புடன் பாஞ்சாலியின் துயிலைக் கலையத் துடிதுடிக்கையில், அவள் பெண்மை எப்படி எல்லாம் புறையேறி பரிதவித்திருக்கும். திக்கற்று நிற்கும் பாண்டவர்களின் பரிதாபகரமான நிலைமையை அவன் மனம் சிந்திக்கும் போது, கபாலிக்கு அவனை மீறிக் கொண்டு கண்ணீர் மளமளவென்று கொட்ட ஆரம்பித்தது. கொண்ட மனையாளின் படுமோச நிலைமையை அவர்

கள் மனம் எப்படித்தான் கண்டு சகித்ததோ. பீம னின் சபதமும் பாஞ்சாலியின் சீற்றமும் அவன் காதில் ஒலித்தன.

புராணத்திற்கு ஒருபிடியும் குறைந்தது நானல்ல என்று சரித்திரம் தன் பனிபோன்ற பரப்பில் உடைந்த பெண் உள்ளங்களை பரப்புவதை கபாலி தன் மனக்கண்ணுல் கண்டான். ஆஹா! எத்தனை சாம்ராஜ்யங்கள் மண்ணில் புதைந்து மறைந்திருக்கின்றன. எல்லாம் பெண்கள் மனதைக் கவர எண்ணி! சக்கரவர்த்திகளின் சூருவளி மோகம். ஹெலன், கிளியோபட்ரா, நூர்ஜஹான், பத்மினி, இப்பேரழகிகளின் அசாதாரண சௌந்தரியம் சரித்திரத்தின் நீரோட்டத்தையே ஒடித்து ஒரு பிரம்மாண்டமான தேக்கத்தை, அகிழை ஏற்படுத்தி அதில் எத்தனை பலி வாங்கியிருக்கின்றன. சிவகாமியின் அழகால் வாதாபி அழியவில்லையா?

இது போன்ற எண்ணங்கள் அவன் கவிதா அரங்கத்தில் மின்னல் வேகத்தில் உதித்து மின்னல் வேகத்தில் மறையவே, கபாலி திக்கற்றவனுய், நோக்கம் அற்றவனுய், குழந்தை போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். தன் சலனமற்ற நிஷ்காம்மிய வாழ்க்கைக்கு, இது போன்ற சோதனை துளிர்க்கும் என்று ஒருகாலும் எண்ணியதில்லை. விதி விட்ட வழியே செல்வோம் என்று மனதைத் தேற்றிக்கொள்ளவும் அவனுல் முடியவில்லை.

மெல்ல எழுந்து அடிமேல் அடிவைத்து நடக்க ஆரம்பித்தான். ஆனுல் கால்களோ கல் தூண்கள் போல் கனத்தன. ஹிருதயத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் வலுக்கும் பாரமோ சொல்லவேண்டியதில்லை.

'ஐயோ! ஏன் மஞ்சுவை சினிமாவில் நடிக்க சம்மதித்தோம்' என்றே அவன் மனம் தவித்தது. அப்பொழுதே மறுத்திருந்தால், இத்தனை தூரத்திற்கு சம்பவங்கள் துரிதமாக முன்னேற வழியிருக்காதல்லவா?

நடந்தது நடந்து விட்டது. பழைமையைப் பரிசோதிப்பதில் பலன் கிட்டப் போவதில்லை.

மஞ்சு தனக்கும் துரோகம் செய்வாள் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை.

ஒரு வேளை அவள் மனம் தூய்மையாயிருந்தால்?

எல்லாம் கலைக்காக; நடிப்பிற்காக அவள் சந்துருவின் ஆலிங்கனத்திற்கு சிக்கியிருந்தால்?

சீ, நடிப்பாவது! கலையாவது! நடிப்பு முதற்படியாயிருந்தால்?

ஒரு பயங்கர பாதாள செய்கைக்கு செல்லும் இருண்ட பாதையில் முதலில் தோன்றும் மங்கலான இடைவெளியாயிருந்தால்?

ஆனால், நன்று!

அவன் சம்மதித்துத்தானே அவள் நடிக்கிறாள். தவிர, அவன் எழுதின நாடகத்தில் —

போதாதன்று, சந்துரு அதில் கதா நாயகனாக நடிக்க அவன் தானே சம்மதித்தான்.

தைரியமிருந்தால், அத்தருணமே முடியாது என்றல்லவோ கூறியிருக்க வேண்டும்.

கைகளைப் பிசைந்து கொண்டான். மிரள மிரள விழித்தான். வானமெங்கும் மஞ்சுவின் தோற்றம் பரவிக் கிடப்பது போலும், அந்த தோற்

றத்தை மறைப்பதுபோல் சந்துருவின் உருவம் அதன் மீது படர்வது போலவும் கவிக்குத் தோன்றியது.

நெருப்பை மிதித்தவன் போல் வாய்விட்டுக் கதறிவிட்டான்.

மரங்கள் காற்றில் அசைந்தன. அவைகள் அவனைக்கண்டு எக்களிப்பது போல் அவன் மனம் நினைத்தது.

ஏதோ ஒரு ஆவேச எண்ணம் மனதில் தூண்ட, வெறிபிடித்தவன் போல் தன் வீட்டை நோக்கி நடந்தான். காலில் தடுக்கிய கற்கள் பஞ்சாக நாலா பக்கமும் சிதறின. தன் ஜரிகை வேஷ்டியும் காற்றில் பறந்து ஒரு புதரின் அடியில் அடைக்கலம் புகுவதையும் அவன் கவனிக்கவில்லை.

வீட்டை அடையும் வரை அவன் நடையின் வேகம் இம்மி அளவும் தளரவில்லை.

சமாதிக்குள் நுழைவது போல் தன் அறைக்குள் சென்ருன் கபாலி. அவன் புண்பட்ட மனம் சாந்தியை தரிசிக்க ஏங்கியது. அவனல் ஒரு இடத்தில் நிம்மதியாய் உட்கார முடியவில்லை. வேதனையின் கூரிய முனை அவன் கவிதா உள்ளத்தை நிதானமாகத் துண்டித்துக் கொண்டிருக்கையில், அவன் இன்னலில் பதருமல் இருக்க முடியுமா?

சோர்ந்து சோபாவில் உட்கார்ந்தான்.

ஜன்னல் வழியாக வெளியே அசைந்து கொண்டிருக்கும் மரக்கிளை அவன் கண்ணுக்கு புலப்பட்டது. அது போற்றிக் கொண்டிருக்கும் இலைப் போர்வை, தீயில் தோய்த் தெடுக்கப்பட்ட தளிர்கள் போல் அவனுக்குத் தோன்றின. சரேலென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு வேறு திசையை நோக்கினன். தன் புத்தக அலமாரி தென்படவே, எழுந்து அதன் அருகே சென்ருன். ஏதாவது படித்து, தன் துக்கத்தை மறக்கலாம் என்று எண்ணி ஒரு புத்தகத்தை அனுயாசமாக வெளியே உருவினன். அவன் கைக்கு வந்த புத்தகம் 'அகல்யா!' தணலைத் தொட்டவன் போல் அதைத் 'தொப்' பென்று கீழே போட்டு விட்டு வேறு புத்தகத்தை எடுத்தான். அது 'பாஞ்சாலியின் சபதம்!' வீரிட்டு அலற வேண்டும் என்றிருந்தது அவனுக்கு. என்ன செய்வது என்று தெரியவில்லை. குட்டி போட்ட பூனை போல் அங்கு மிங்கும் அலைந்தான். மனதில் சாந்தி இருந்தாலல்லவா ஒரு இடத்தில் நிற்க இருப்புக் கொள்ளும்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கண்ணை இறுக மூடிக் கொண்டான். ஆனல் கண்ணிமை போர்க்கோலம் பூண்டு ஆயிரம் ஆயிரம் பெண்மைக்

கொடூரங்களை ஒரு கணத்தில் சித்தரித்துக் காண்பிக்கத் தொடங்கியது. அகல விழித்துக் கொண்டே, சிலைபோல் உட்கார்ந்து விட்டான்.

அறை முழுவதும் ஒரு மங்கலான ஒளி படிந்திருந்தது.

'டக்' என்ற சப்தம் கேட்டது. திடுக்கிட்டவனாய் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் உள்ளே வரவில்லை. அந்த பேய் துயிலும் ஜாமத்தில் எவர் துணிந்து நடமாடுவார்கள்—ஸினிமாத் தொண்டர்களைத் தவிர்த்து?

உற்று நோக்கினான்.

புத்தக அலமாரியிலிருந்து தன் தலையை வெளியே நீட்டி அறை முழுவதும் தன் பயந்த பார்வையைச் செலுத்திய ஒரு எலி, சற்று துணிச்சலுடன் வெளியே வந்தது. திக் விஜயத்திற்கும் புறப்பட்டது.

கபாலி கற்சிலை போல் உட்கார்ந்திருந்ததால், பயமின்றி அது அங்கும் இங்கும் உல்லாசமாக தன் சுற்றுப் பிரயாணத்தைத் துவக்கியது. அவன் தன் மனதை உந்தும் உற்சாகம் கவியின் பெருமையைக் கீறி விட்டது, அதன் தனி அட்டகாசத்திற்கு மெருகு தீட்டியது போல். அதன் சகதர்மிணியும் அங்கே ஆஜராயிற்று. இரண்டும் கள் வெறியுடன் தங்கள் லீலைகளை உல்லாசமாக நடத்தின. 'கிரீச்' என்று கத்துவதும், ஒன்றன் மீது ஒன்று மோதிப் புரண்டு பலத்த புரட்சி செய்யும் காக்ஷி கவியின் கண்ணில் கண்ணீரைச் சுரக்க வைத்தது.

அவன் மனப்போர் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்தது.

இவ்வெலி தம்பதிகள் மகிழ்ச்சியுடன் பரப்பில் பயமின்றி துள்ளிக் குதித்து மகிழ்ந்து கிடப்பதை விதி பொறுமைப் படாமல் பார்த்துக் கொண்டிருக்குமா?

பின் உலகில் விபத்து ஏது?

துன்பம் ஏது?

உள்ள முறிவு ஏது?

ஜன்னல் சற்று விலகுவதும், அதன் நிழலிலிருந்து ஒரு கருப்புப் பூனே அடிமேல் அடி வைத்து எலி தம்பதிகளே அணுகுவதையும் கபாலி கவனிக்கவில்லே.

'க்ரீச்' என்ற சப்தம்.

அது மரணக் குரல். தம்பதிகளின் இன்பத்தை அடியோடு துண்டித்த விதியின் எதிரொலி! ஒரு அராஜக தாபம் அந்தத் தருணம் மட்டும் தன் வேட்கையைத் தீர்த்ததற்கு எழுந்த பேயொலி!

பெண் எலி பூனே வாயில் மறைந்தது. தன் உயிரே பிரதானம் என்று கருதி தப்பி ஓடிய கணவன், எத்தனே மகத்தான வேதனேயுடன் இந்தப் படுகொலேயை, இயற்கையின் அந்தியை, வெறுத்து இருட்டில் ஓடி ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்.

மஞ்சுவின் பரிசுத்தமான பெண்மைக்கு இத்தனே கள்ளத்தனமாக, பகிரங்கமாக களங்கம் ஏற்பட தானே ஜவாப்தாரியாக யிருந்தோம் என்று கபாலி நினேக்கும்போது, அவன் அனலிலிட்ட மெழுகுபோல் பதறி உருகினுன். யானே தன் தலே

யிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் என்ற வசனம் அவன் சம்பந்தப்பட்ட மட்டும் உண்மையாகவே மாறிவிட்டது.

வெறுப்பு, சீற்றத்தில் ஸ்புடமாகி அகோரத் தீர் மானத்தை அவன் மனதில் வேரூன்றி விட்டது.

அவன் உள்ளம் துடித்தது. கைகள் பட படத் தன. எண்ணங்கள் ஜ்வாலையாக எழுந்தன.

கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு, கபாலி மருண்டு எழுந்தான். உற்றுக் கேட்டான். ஆம். அவள் தான். மஞ்சு தான். தன் மனதை ஒரு பைசாச ஆவேசத்தில் விசிறி எறிந்து. பல்லாயிர ரஸிகர்களை மகிழ்விக்க தன் பெண்மையைப் பலி யிட்ட மஞ்சுதான்.

சோர்ந்து அவளும் உள்ளே வந்தாள்.

சீற்றத்தில் புழுங்கிக் கொண்டிருக்கும் கபாலி அவள் மீது புலிபோல் பாய்ந்தான். மறுகணம் பதை பதைக்கும் கைகள் அவள் கழுத்தை அழுத் தின.

அவன் கவிதை, அவன் கலைப் பண்பு, அவன் கற்ற கல்வி எல்லாம் கணத்தில் மறைந்து, அவன் அவள் முன் பேயாக மாறினன். உணர்ச்சி ஒன் றுக்கே கௌரவம் அளித்தன, அவன் மனதில் புரளும் அனந்த கோடி எண்ணங்களும்.

மஞ்சு திணறினள்.

கணவனின் இந்த அடாத செய்கையை அவள் கனவிலும் எதிர்பார்த்தவளல்ல. அவளுக்கு மூச்சுத் திணறியது.

கபாலியின் மிருக உணர்ச்சி பெண்மையின் ஸ்பரிசத்தில் உருகியது. சீற்றமும் கொடியதாக படிபடிப்படியாகத் தேய்ந்தன. அவளுடைய பரிதாபமான தோற்றம் அவன் கவிதையைக் கிளறியது. உண்மைக் குற்றவாளி தானே தான் என்பதையும் நினைப்பூட்டுவது போலிருந்தது அவனுக்கு.

அவள் கழுத்தை அசுர வெறியுடன் நெறுக்கும் கைகளை அப்புறப்படுத்தினான்.

நீண்ட பெரு மூச்சு விட்டான்.

அவள் இந்த எதிர்பாராத செய்கையில் துவண்டுபோய், விடுதலை அடைந்த மறு கணமே, அப்படியே தரையில் விழுந்தாள். நகைகள் சிதறின. சேலை விலகியது.

"நீ வேசி" என்று கதறினான் கபாலி.

அந்தக் கொடிய வார்த்தை அவள் ஹிருதயத்தில் கத்தி போல் பாய்ந்தது.

திடுக்கிட்டெழுந்தாள், தரையிலிருந்து அவள் சோர்வு அந்த தருணத்தில் காற்றாய் பறந்தோடி விட்டது.

"நீ வேசி!" என்று மீண்டும் அலறினான், வெறி பிடித்தவன் போல், பித்துப் பிடித்தவன் போல்.

மஞ்சுவின் உடல் நடுங்கிற்று; பதறிற்று. கணவனை எரிப்பது போல் பார்த்தாள்.

ஆனால் கபாலியின் கண்களோ அக்னி குண்டம் போல் ஜ்வலித்தது.

அவனை மகத்தான வெறுப்புடன் பார்த்துவிட்டு வெளியே ஓடினன் கபாலி.

'படால்' என்ற சப்தம்.

கவி, பிரபஞ்சத்தின் அந்தகாரத்தில் மறைந்து விட்டான்.

# 9

அண்டம் கிடுகிடுத்து வெந்து அழிந்து போனு லும் ஏற்படாத வேதனையே மஞ்சுளவை உலுக்கி யது. சொல்லொணு துக்கமும் ஆவேசமும் வெறுப் பும் அவள் மனதில் மாறி மாறித் தோன்றி அவள் தூய பெண்மையை தகித்தன.

மனித உள்ளம் இத்தனை கேவலமான, துச்ச மான எண்ணங்களுக்கு பலியாகும் என்று அவ ளால் சிந்தனையிலும் கருத முடியவில்லை.

தன்னைக் கண்டு பூரிக்கும் கணவன், தன் எழி லில் அசாதாரண ப்ரேமையுடன் எத்தருணமும் கொஞ்சிக் குலாவும் கபாலி, எந்த அகோர சம்பவ மும் தங்கள் சலனமற்ற அன்புக்கு ஆபத்தை விளை விக்க முடியாது என்று ஒரு முறைக்கு பன்முறை பகிரங்கமாக பௌர்ணமியின் பூரண பொலிவிலும், இருளின் சலசலக்கும் நிழலிலும், இன்பத்தின் பர வசப் பரப்பிலும், சோதனையின் துன்பகரமான சிகரத்திலும், சபதம் செய்து அவளை மகிழ்வித்த கவி அவளை துவேஷத்தின் வெறியில் தீர விசாரிக்காமல், தீர ஆலோசிக்காமல் 'வேசி' என்று பழித்து பிரபஞ்சத்தின் இருளில் ஓடிப் புதைந்து விட்டான் என்பதை அறிந்த அவள் நெஞ்சம் வெடித்து விடும்போல் படபடத்தது. ஹிருதயத்தில் குமுறும் உணர்ச்சி வெள்ளம் அணை உடைந்து அவள் கண்களினின்றும் பிரவாகித்தது.

அந்திப்பொழுது மயங்கி மறைந்ததும், அடி வானத்தில் அஸ்தமித்த சூரியனின் பாசிபடிந்த நிழல்போல் சந்திரிகை மலரும் போதும், மஞ்சுளவை தன் மடிமீது போட்டுக்கொண்டு அவள் கூந்தலைக் கோதி, முகத்தோடு முகம் வைத்து, "மஞ்சு உன் அழகு அதோ வானக்கண்ணுடியில் பிரதிபலிக்

கிறது பார்! மஞ்சு, நம் இணையற்ற அன்பைக் கண்டு பறவைகள் எத்தனை பொறாமைச் சொற்களை உதிர்க்கின்றன!" என்று கூறிய கவியா தன்னை 'வேசி' என்று அழைத்தான் என்று எண்ண எண்ண அவள் மனம் ஆழங்தெரியாத சூழ்நிலையில் ஆழ்ந்த வண்ணமாயிருந்தது. வாழ்க்கைப் புயலில் சிக்குண்டு, தப்புவதற்கு ஒரு சிறு துரும்பு அகப் பட்டாலும் அதுவே விமோசனத்தின் பலத்த படகு என்ற தவறான எண்ணம்கொண்டு அதை ஆவ லுடன்பற்றி மதிசிதறும் மனிதனின் உள்ளம் பெண்மையை ஒரு ஆறுதலுக்கே தேடுகிறது; ஒரு க்ஷணநேர சுகத்தின் துடிப்புக்கே தன் வாழ்நாள் அனைத்தையும் பணயம் வைக்கிறது; சலனத்தின் சஞ்சலத்தில் நிம்மதி தேய்ந்து சிற்சில சமயங்களில் தீய்ந்தும் போகிறது என்றவள் தீர்மானமான முடி வுக்கு வரும் ஒவ்வொரு க்ஷணமும் அவள் உடல் அவளறியாமலே குலுங்கி அலங்கோலமாகவும் பதறியது.

மனிதனின் விளையாட்டு பொம்மைகளா பெண் கள்?

அவன் சலனபாகத்தின் வெறும் ஆசைக் கருவிகள்தானா?

ஒரு நிரந்தரமற்ற சுக போதைக்காக நுகர்ந்து பார்த்து தூர எறியப்படும் வாடும் மலர்கள்தானா பெண்கள்?

ஆண்கள் எத்தனை வயதாகினும் சரி, விருத்தாப் பியம் படையெடுத்து உள்ளமும் சதையும் உளுத் துப் போனாலும் சரி, ஒரு அழகியைக் கண்டு வைத்த கண் வாங்காமல், அவள் மனம் லஜ்ஜையில் பதை பதைக்கிறதே என்ற எண்ணம் சற்றேனும் இல்லா

மல் விழி பிதுங்க நோக்கலாம். கையில் பணமும் உடலில் தெம்பும் இருந்தால், அவள் பெண்மையை விலை கூறி வாங்கலாம். ஆனால் பெண்கள் தவறி அவர்களை ஒரு முறை பார்த்து விட்டால் உடனே வேசிகள் என்று தூற்றப்பட வேண்டும்.

இது எந்த நீதியாய்ச் சேர்ந்தது என்று அவள் எண்ணம் போராடத்துவங்கியது.

மனதில் களங்கம் இல்லாமலிருக்கும் வரை, உள்ளத்தில் தூய்மை படர்ந்திருக்கும் வரை, உறுதி நெஞ்சாழத்தில் வேரூன்றி யிருக்கும் வரை, உயரிய பெண்மைக்கு பங்கம் எக்காலும் இல்லை.

கவியின் கவிதைகளை பாரிஜாத மலரென போற்றி வந்தாள். கபாலியை நடமாடும் தெய்வமென தொழுது வந்தாள். யாரேனும் அவன் கவிதையில் குற்றம் கண்டு பிடிக்க முன் வந்தால், வெகுண்டு வாதாடி கணவனின் மேன்மையை பறை சாற்றியும் வந்தாள். அவன் பூரண சம்மதத்தின் பேரிலேயே சினிமாவில் நடிக்க இணங்கினாள். சத்துரு அவன் எழுதின நாடகத்தின் கதாநாயகனாக நடிக்கவும் சம்மதம் பெற்றே நடித்தாள். கதையின் போக்கை உணர்ந்து, நடிப்பின் வேகத்தை அறிந்து. 'இதழ் கட்டத்தையும்' வெறுப்பின்றி, மனதில் களங்கமுமின்றி, பலர் முன்னிலையில், தன் கணவன் முன்னிலையில் நடிப்புக்கலைக்கு அப்பு அழுக்கு ஏற்படாவண்ணம் நடித்து வெற்றியும் பெற்றாள்.

இறுதியில் அவள் கண்ட பலன் கணவனின் சீற்றம்; அதன் விளைவாகத் துளிர்த்த தன் வாழ்வின் குலைவு. தன் வாழ்க்கைக்கு இது போன்ற பங்கம் ஏற்படாது என்றவள் மனம் துணிந்து விளியா

தொண்டில் ஈடுபட்டாள். கலைஞானம் முதிர்ந்த கபாலிக்கே இந்த விபரீத எண்ணங்கள் தோன்றி தன் உயிருக்கும் மேலாக நேசித்து வந்த மனைவியை ஏசி உதறித் தள்ளிவிட்டு அவன் தன் வாழ்க்கையையே துறக்க ஹேதுவானால், சாதாரண மக்களின் மன அதிர்ச்சியை விவரிக்க முடியுமா?

ஸினிமா ஒரு கலை! மகத்தான கலை! அது உஜ்ஜீவிக்க வேண்டுமானால் அதைச்சுற்றி வட்டமிட்டு வரும் அபகீர்த்தியும் அவச்சொல்லும் அடியோடு அழிய வேண்டுமானால், உண்மைக் கலைஞர்களும் சமூகத்தின் உயரிய பீடத்தில் வீற்றிருக்கும் கனவான்களும் அழகிகளும் அந்தக் கலையின் மேன்மையான சேவையைக் கருதியே இதில் ஈடுபட வேண்டும். புதுக்கற்பனைகள், வாழ்க்கையை ஒட்டிய உயரிய உணர்ச்சிகள், மன துக்கு புனிதமான உல்லாஸம் ஊட்டும் ஹாஸ்யங்கள்: இவைகளே கலா ஓவியங்களாக மிளிர வேண்டும்.

இந்த லக்ஷியம் ஒன்றே சத்துருவை ஸினிமாவில் ஈடுபடத்தூண்டியது. மஞ்சுளாவின் அழகையும் ஆகர்ஷித்தது. முதன் முதலில் கவியின் சம்மதத்தையும் பெற்றது. இறுதியில் இந்த அலங்கோலம் அரும்பும் என்று அவர்கள் மூவரில் ஒருவராவது எண்ணவில்லை; கருதவும் முடியவில்லை. இந்த ஒரே கட்டத்தில்தான் விதியின் ரேகை எச்சரிக்கையின்றி மின்னல்போல் பளிச்சிட்டு வாழ்க்கையின் பசுமையைத் தீய்த்து விடுகிறது.

கணவனைப் பிரிந்து அவளால் ஒரு க்ஷணமும் வாழமுடியாது. அவன் அன்பை இழந்து ஒரு க்ஷணமும் அவளால் உயிரோடிருக்க முடியாது. அசாதாரண அன்பில், கட்டுமீறிய ப்ரேமையில் வளர்ந்து வந்தவள் அவள்.

கபாலியின்றி வாழமுடியாது என்ற தீர்மானத்திற்கு அவள் வர நெடுநேரம் பிடிக்கவில்லை. சோர்ந்து அப்படியே மதிமயங்கி படுத்து விட்டாள்.

அவள் கண்விழித்துப் பார்த்ததும் பொழுது புலர்ந்து நெடுநேரமாகி விட்டது என்பதை அறிந்தாள்.

இரவு முழுவதும் கண் விழித்தது ஒரு புறம்; வாழ்க்கைக்கே ஏற்பட்ட பயங்கர அதிர்ச்சி ஒருபுறம்; தன் தீர்மானம் ஒருபுறம்; எல்லாம் சேர்ந்து அவளை வாட்டி வதைத்தன.

அவள் கண்கலங்கி உட்கார்ந்திருக்கும் தருணம் தான் அங்கே மெதுவாக நடந்து வந்தான் சந்துரு.

அவள் கண்கள் அழுது அழுது கோவைப் பழம்போல் சிவந்து கிடப்பதைக்கண்டு கதிகலங்கி நின்றான்.

மஞ்சு வீராவேசம் வந்தவள்போல் எழுந்து நிமிர்ந்து நின்றாள். மறு விநாடி அவள் குரல் இடி ஒலிபோல் கர்ஜித்தது "போங்கள்! வெளியே போங்கள். என் வாழ்க்கை குலைந்தது போதும். குத்துயிரும் கொலை உயிருமாக கிடக்கும் என்னை பரிசீலனை செய்யவும் வந்து விட்டீர்களா?" என்று கதறினாள்.

இது போன்ற வரவேற்பை அவன் எதிர்பார்த்தவன் அல்ல. லக்ஷியம் ஒன்றையே சதா கனவு காணும் அவன் உள்ளம் இந்த எண்ணங்களைச் சிறிதேனும் சிந்தித்தது அல்ல.

"மஞ்சு!" என்றான் சந்துரு திடுக்கிட்டு.

"என்னை மஞ்சு என்று அழைக்காதீர்கள். உம்மால் என் வாழ்வே சூன்யமாகி விட்டது.

என் நிம்மதியைக் குலேத்து என்னைப் படுகுழியில் புதைத்து மூடியது போதும்" என்று மளமள வென்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

"உனக்கு ஏன் இந்த திடீர் மாறுதல்?"

"எல்லாம் உங்களால் தான்."

"அப்படியானால் என்னை நீ இங்கு எதிர்பார்க்க வில்லையா?" என்று கேட்டான் சத்துரு.

"உங்களையா? இல்லை!"

"பின்னர்?"

"மரணத்தைதான்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் அவன் மனம் படாதபாடு பட்டது. அவளைக் கேள்வி கேட்டு அவள் வேதனையைப் பெறுவதில் பயனில்லை என்பதை உணர்ந்து ஜன்னல் அருகே போட்டிருக் கும் சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

மௌனம் சற்று நேரம் நிலவியது.

சாந்தமே உருவெடுத்தாற்போல் சற்று நேரம் இருந்த மஞ்சு சர்ப்பம் போல சீற ஆரம்பித்தாள்.

"மிஸ்டர் சத்துரு! உங்களை நான் நம்பினேன். அதன் பலன் கைமேல் எனக்குக் கிட்டிவிட்டது." என்று கூறி அழ ஆரம்பித்து விட்டாள்.

சந்துருவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவனோ உண்மையான கலாரஸிகன். மனதில் சற்றேனும் தீங்கு நினைக்க முடியாதவன். வஞ்சம் தலைகாட்ட முடியாத உள்ளம் படைத்தவன். தன்மீது மஞ்சு

எச்சரிக்கையின்றி இந்த அபாண்ட மொழிகளை அடுக்குவதைக் கண்டு அவன் பிரமித்துப் போய் விட்டான்.

"மஞ்சு! இப்படி நீ என்னை விசாரிக்காமல் பழிப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை!" என்று அவன் சலித்துக்கொள்ள, அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

சந்துரு சரேலென்று எழுந்தான். அவளை நெருங்கி அவள் கரங்களை அன்புடன் பற்றினான்.

"என்னைத் தீண்டாதீர்கள்!" என்று பேதை அலறிவிட்டாள்.

தீயை மிதித்ததுபோல் சந்துருவின் உடல் பதறியது.

"மஞ்சு! ஏன் இப்படி மாறிவிட்டாய்?" என்று துக்கம் பொங்கக் கேட்டான்.

"நானா மாறிவிட்டேன்? நீங்கள் அல்லவா என்னை மாறச் செய்து விட்டீர்கள். என்வாழ்க்கையைக் குலைத்து விட்டீர்கள். என்னை என் கணவனினின்றும் பிரித்து விட்டீர்கள்" என்று வாய்விட்டுக் கதறினாள் மஞ்சுளா.

அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவன் ஹிருதயத்தில் முள் போல் தைத்தன. அந்த வேதனையை மகத்தான பொறுமையுடன் அடக்கிக் கொண்டு, "மஞ்சு! நீ என் மீது சுமத்தும் குற்றங்களில் ஒன்றுவது நான் செய்யவில்லை என்றே நினைக்கிறேன்" என்று அழாத குறையாகச் சொன்னான் சந்துரு.

"தாங்கள் செய்த குற்றத்தை உலகில் எவர் எந்தக் காலத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்?" என்று ஆவேசத்துடன் கேட்டாள்.

"மஞ்சு! உன் மனதில் ஏதோ ஒரு விகாரம் ஊசலாடுகிறது. விஷத்தைக் குடிப்பது சுலபம். அதன் தீமையிலிருந்து விலகுவதுதான் கடினம்" என்றான் நிதானமாக.

"என் மனதில் விஷத்தை மட்டுமா உங்கள் அடாத செய்கை சிதறியது. என் உள்ளத்தையே கருக அடித்து விட்டதே."

"மஞ்சு, கவனமாய்க் கேள். நான் உனக்கு ஒரு தீங்கும், இன்றோ, இன்றுவரையோ செய்ததாக எனக்கு ஞாபகமில்லை. நான் கனவிலும் புரிந்ததாகக் கூட நான் நினைக்கவில்லை."

இதைக் கேட்டவுடன் அவள் அவன் முன் பேய் பிடித்தவள்போல் உறுமிக்கொண்டு வந்து நின்றாள்.

"சந்துரு, எங்கள் வாழ்வைக் குலைத்த பாபி நீங்கள் தான். இதை மறுக்க முடியுமா?"

"உங்கள் வாழ்வையா? இது என்ன புதிர் போலிருக்கிறதே."

"இது புதிர் அல்ல. உங்கள் சண்டாளச் சதி" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

அவனறியாமலே சந்துருவின் விரல்கள் அவன் மார்மீது அழுந்தின, வெடிக்கும் மனப் புண்ணை மூட எத்தனிப்பது போல்.

"மஞ்சு, கபாலிக்கு நான் ஒரு தீங்கும் இழைக்கவில்லையே?"

"ஆனால் என் வாழ்வை பாழாக்கினீர்களே. அது ஒன்றே போதாதா?"

"என்ன? உன் வாழ்வையா! இல்லை. சத்தியமாக இல்லை" என்று கூறினான் சந்துரு.

"இல்லாமல் தான் உங்கள் நண்பர் கபாலி என்னை 'வேசி' என்று பழித்துவிட்டு ஓடிவிட்டாரா? என்னை உதறித் தள்ளிவிட்டு காரிருளில் மறைந்தாரா? சொல்லுங்கள். நீங்களே சொல்லுங்கள்" என்று கண்களினின்றும் நீர் கரை புரண்டோட கதறினாள்.

சந்துரு திடுக்கிட்டான்.

"என்ன? கபாலி உன்னை 'வேசி' என்றா அழைத்தான்?" என்று பதறிக் கேட்டான் சந்துரு.

"ஆம். எல்லாம் உங்களால் தான். நாங்கள் இருவரும் இரு பக்ஷிகள் போல் உலகை மறந்து சுகித்திருந்தது உங்கள் கண்ணை உறுத்தியது. கலை கலை என்று சாக்குக் கூறி எங்கள் வாழ்நாளைக் குலைத்துவிட்டீர்கள். அவர் என் மீது இந்த அடாத பழியைச் சுமத்த எத்தனை புண்பட்ட சிந்தனைக்குப் பின் துணிந்திருக்கும்; தீர்மானித்திருக்கும். சந்துரு! சந்துரு! நீங்களா எங்கள் சுகத்திற்கு எமனாகத் தோன்ற வேண்டும்? என் வாழ்வு இத்தனை கொடூரமாகக் குலைய வேண்டும் என்று எத்தனை நாட்கள் சதி செய்தீர்கள்? நீங்கள் பாபி; பாபி தான்; சண்டாளன்" என்று கதறி அழுது முகத்தை கைகளில் புதைத்துக் கொண்டாள் மஞ்சு.

அவள் முன் உணர்ச்சியின் எழுச்சியால் மண்டியிட்டு உட்கார்ந்தான் சந்துரு. அவளுடன் நன்கு பழகி யிருந்தான் ஆதலாலும், மனதில் தீமை இம்மியளவும் இல்லாதவன் ஆனதாலும், அவள் கையை இறுகப் பற்றிக்கொண்டு, "மஞ்சு! உன்னை

நான் என் சகோதரிக்குமேல் பாவித்து வருகிறேன். இதை நீ சத்தியமாக அறிவாய். நீ உத்தமி. நானும் களங்கமற்றவன். கபாலி உணர்ச்சியின் குரலுக்கு தன் உயிரையே பணயம் கூறுபவன். இதில் குற்ற வாளி யார்? கலைக்காக உன் அதரங்களை உணர்ச்சி இம்மி அளவுமில்லாமல் என் வாய் தீண்ட, சம்ம தித்த நீயா? சகோதரியைத் தழுவுகிறோம் என்ற புனிதமான உணர்ச்சியே ஊசலாடிய என் உடலா? அல்லது சந்தேகப் பேய்க்கு தன் விவேகத்தை பலி கொடுத்த உன் கணவன் கபாலியா?'' என்று அவன் நிதானமாகவும் உருக்கமாகவும் கெஞ்சிக் கேட்கையில், அவள் தன் துக்கத்தைத் தாங்க முடியாதவள் போல் சந்துரு மீது சாய்ந்து விட்டாள்.

சந்துரு அவளை மெதுவாகத் தாங்கி, குழந் தையை எடுத்துச் செல்வதுபோல் அவளை மஞ்சத் துக்கு எடுத்துச் சென்று படுக்க வைத்தான். ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அவள் அருகிலேயே உட்கார்ந்தான்.

"மஞ்சு! நீ பெண்களின் திலகம். உன் பரிசுத் தமான உள்ளத்தையும், என் களங்கமற்ற மனதை யும் கபாலி உணரவில்லை. நீ அழகி. அவனோ கவி. உணர்ச்சியின் கருவி. எதையும் தீர ஆலோசித்துச் செய்ய பொறுமை இல்லாதவன். நாம் நேற்றிரவு படம் பிடித்த கட்டம் அவன் மனதில் வீண் சந்தே கங்களும் துர் எண்ணங்களும் எழச் செய்திருக்கும். அவன் துன்புற்று, உன்னை வாய்க் கூசாமல் பழித் துச் சென்றது மிகவும் அர்த்தமற்றது. மஞ்சு! வாழ்க்கையில் லக்ஷியம் ஒன்றே உயரியது. அதன் வெற்றிக்கு ஒரு சிலரே தங்கள் உயிரையும் திரண மாக மதித்து தியாகம் செய்யவும் துணிவார்கள். அந்தத் துணிவு ஒன்றே ஒரு மனிதனின் பூரண

வாழ்க்கையை நிர்ணயிக்கும்" என்று அவன் கூறியதும் மஞ்சு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

"சகோதரி, உன் அழகு என் மனதில் துச்சமான இச்சையை சத்தியமாகத் தூண்டவில்லை. உன்னத அன்பைக் கிளறியது. ஒரு உயரிய அபிலாஷையை வளர்த்தது. அதன் வெற்றிக்கு அஸ்திவாரம் உன் கணவனின் பரிபூரண சம்மதம்தான் என்பதை உன்னால் மறுக்க முடியுமா? நீயே சொல்," என்று அவன் கேட்டதும், அவள் கண்களினின்றும் கண்ணீர் மளமளவென்று பெருக்கெடுத்து ஓடின.

"மஞ்சு! மோஹனின் துராசையை நல்ல சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு நிராசையாக்கினேன். திரையில் உன் காதலனாக நடிக்க கபாலியின் சம்மதத்தையும் பெற்றேன். அவன் மனம் இப்படியெல்லாம் விகாரம் அடையும் என்று நான் அன்றே அறிந்திருந்தால், நிச்சயமாக இந்த பாகத்தை வேறு எவருக்காவது கசப்பின்றி கொடுத்திருப்பேன். இதில் நடித்து வெற்றி பெறுவது அத்தனை சுலபம் அல்ல என்பதை உணர்ந்தே நான் இந்த பாகத்தை ஏற்றுக் கொண்டேன். இது எல்லாம் உனக்குத் தெரிந்த விஷயம் தான். நீயும் மறுக்கவில்லை. என்னை அன்புடன் ஏற்றாய். உன் பாகத்தையும் அதி அற்புதமாக இணையற்ற திறமையுடன் நடித்தும் காண்பித்துவிட்டாய். நம்முடைய படமும் இந்த இறுதி கட்டத்துடன் இன்றோடு பூர்த்தி அடைந்து விட்டது. உன் பரித்தியாகம், கலா ஆர்வம், என் கனவை நினைவாக்கி விட்டது. எனக்கு லக்ஷிய வெற்றியும் அளித்து விட்டது" என்று கூறி ஆனந்த பாஷ்பம் சிந்தினான் சந்துரு.

மஞ்சு அவன் வார்த்தைகளின் உண்மையை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தாள்.

ஆம். அவன் கூறுவதிலும் ஒரு பிழையில்லை. ஒரு அர்த்தமற்ற சந்தேகத்திற்குத் தன் கணவன் தன் அறிவையே விலைகூறி அடிமையாக்கித் தன் வாழ்நாளையும் வீணாக்கிவிட்டான் என்பதை நினைக்க நினைக்க அவளுக்குக் கஷ்டமா யிருந்தது. அதி அற்புதக் கவிதைகளை உலகிற்கு அளித்த அவனுடைய மேதை சந்தேகம் என்ற சிறிய பாறை மீது மோதுண்டு சிதறியது பெரிய விந்தையாகவே அவளுக்குத் தோன்றியது.

"சந்துரு! நீங்கள் சொல்வதெல்லாம் எனக்குச் சொப்பனத்தில் நடப்பதுபோல் தோன்றுகிறது. சந்துரு, சகோதரா! நம்மிருவரையும் கபாலி சந்தேகிக்கும்படி நாம் அவருக்கு என்ன கொடிய தீங்கு செய்துவிட்டோம்? நம் இருவர் உள்ளத்தில் உறங்கும் தூய்மையை அவர் கவிதைக் கண்கள் காண சந்தியற்றனவா யிருந்தால், குற்றம் யாருடையது? நம்முடையதா?"

"இல்லவே இல்லை!" என்று கூறி அவள் ரோஜா விரல்களைத் தன் இருகைகளாலும் பற்றிப் பெருமூச்சு விட்டான் கலா ரஸிகன்.

"மஞ்சு! நான் இந்த விபரீதத்தை கபாலியிடமிருந்து எதிர் பார்க்கவில்லை. பண்பட்ட அவன் கவிதா உள்ளம் கேவல உணர்ச்சிகளால் புண்பட்டு புரையோடும் என்று கனவிலும் கருதவில்லை. எல்லாம் விதியின் பயன். அதன் நீரோட்டத்தில் சிக்குண்ட நாம் விலகி நிற்க முடியுமா? இறுதியில் அதன் எங்களிப்புக்குத் தான் பாத்திரமாக வேண்டும். மஞ்சு! இது சத்தியம். கவனமாகக் கேள்.

உன்னை வெறுத்து உன்னைப் புறக்கணித்து கபாலி ஓடி விட்டானே என்று கவலைப்படாதே. கவலைப் பட்டுப் பயனில்லை. என் உயிர் உள்ளமட்டும் நான் உன்னை என் சகோதரிக்கு மேல் பாவித்து வருகி றேன். இது சத்தியம், இது சத்தியம்!" என்று சந்துரு அடித்துக் கூறியதும், மஞ்சுவின் கண்களி னின்றும் கண்ணீர் மளமளவென்று ஓடி வழிந்தது.

கண்ணை மூடிக்கொண்டு சிந்தையில் மூழ்கினுள் மஞ்சு.

அவள் சிந்தனையைக் கலைக்க மனமில்லாதவன் போல் சந்துரு அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென் ருன். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து அவளை தனியே விட்டுவிட்டு தன் வீட்டை நோக்கி மோட்டாரை ஓட்டினுன்.

கண் விழித்ததும் மஞ்சுவுக்கு சஞ்சலமா யிருந் தது. தன் முன் நின்ற சந்துருவும் ஒரு ஆறுதலா யிருந்ததும் அப்போது மறைந்ததால், அவள் என்ன செய்வது என்று தோன்ருமல் அங்குமிங்கும் உலாவத் தொடங்கினுள்.

கணவன் திரும்புவது துர்லபம். அவன் பிடி வாதக்காரன். தான் நினைத்தது வேருக எவர் சொல்லி வற்புறுத்தினுலும் செவி சாய்க்க மாட்டான்.

பின்னர் நடக்கவேண்டியதுதான் என்ன?

வந்தது வரட்டும் என்று இருக்க வேண்டிய தைத் தவிர வேறு வழியே இல்லை. தன்மீது குற்ற மில்லை. சந்துருவும் களங்கமற்றவன்.

வாசலில் மோட்டார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு பால்கனி வழியாக கீழே எட்டிப் பார்த்தாள்.

மோட்டாரில் இருந்து இறங்குவது சந்துரு என்பதை தெரிந்து கொண்டதும் அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

ஸோபாவில் உட்கார்ந்துகொண்டு அவன் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள். மாடிப் படியில் காலடி சப்தம் கேட்டது. அந்த சப்புத்தை தொடர்ந்து கொண்டே சந்துருவின் தோற்றமும் உருவகமாயிற்று.

"மன்னிக்கவும். எனக்கு வீட்டில் தனியாக இருக்க இருப்புக் கொள்ளவில்லை. அதனால் உனக்கு சிரமம் அளித்தாலும் பரவாயில்லை என்று துணிந்தே வந்துவிட்டேன்" என்று சிரித்துக் கொண்டே அவளை அணுகினான்.

"உட்காருங்கள், நிற்க வேண்டாம். என்னைத் தனியே விட்டு சொல்லிக் கொள்ளாமல் கூட போய் விட்டீர்களே?' என்று கடிந்து கொண்டதுபோல் கூறினாள் மஞ்சு.

"மஞ்சு! உன்னிடம் அவசியமாக ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. அடுத்த வெள்ளிக் கிழமை இந்தப் படத்தைத் திரையில் போட்டுப் பார்க்க ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாக முடித்து விட்டேன். இரவு ஒன்பது மணிக்குள் நீ கட்டாயம் வரவேண்டும்."

"அதற்கு என்ன ஆக்ஷேபனை" என்றாள் சிரித்துக்கொண்டே.

"மஞ்சு! உன்னை வீணாகப் புகழ்கிறேன் என்று நினைக்காதே. உன் நடிப்பின் சில பட்ங்கள் என் கை வசமிருந்தன. ஸினிமா விமர்சனத்தில் அதி சீக்கிரத்தில் பிரபல்யம் அடைந்த 'ஜகத்'திடம் அவைகளைக் காண்பித்தேன். அவர் உண்மையிலேயே திகைத்துப் போய்விட்டார். பால்யத்திற்கேற்ற அழகும், அழகுக்கேற்ற மனோகரமான நடிப்பும், அந்த நடிப்பின் நெளிவிலும் ஒரு தனிப்பட்ட கலா லாவண்யமும், அவர் கவனத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. இதுபோன்ற பொக்கிஷங்களே இந்தத் துறையிலிருக்கும் அவதூறைப் போக்கி, பெருமையின் உச்சாணிக் கிளையில் ஸினிமாவின் மேன்மையை உயர்த்தும் என்று அவர் அடித்துக் கூறினர். இதுமாதிரி படங்கள் வந்தால்........" என்று அவன் மேலும் கூறுமுன், "போதும், போதும். ஒரு படமே என்னை இந்த கதியில் கொண்டு வந்துவிட்டது. இன்னும் சில படம் பிடித்தால், நான் இருக்கவேண்டிய இடம் வீடல்ல" என்ருள் மஞ்சு.

"மஞ்சு! என் கனவு நினைவாகிவிட்டது. ஆனல் அந்த வெற்றி உன் துன்பத்தில் பிறந்தது என்று நினைக்க நினைக்க என் மனம் மிகவும் வேதனைப் படுகிறது."

"சந்துரு, என் தொண்டு இந்த கட்டத்திலேயே நிற்கட்டும் — என் கருகிய உள்ளம் கரைந்து போகுமட்டும்" என்று அவள் கூறினதும், கண்ணீர் கசிந்தது அவள் பரந்த கண்களினின்றும்.

சந்துரு வேறு வார்த்தை கூருமல் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்ருன்.

சில நிமிஷங்களுக்குப் பின் மோட்டார் வண்டி புறப்படும் சப்தம் கேட்டது.

தனிமையும் மஞ்சுவும் இணைபிரியா நண்பர்களாகிவிட்டார்கள். வீட்டை விட்டு அவள் ஒரு அடி வெளியே எடுத்து வைப்பதில்லை. சிந்தனை, அல்லது கபாலியின் கவிதைகளின் முத்துக் குளிப்பு. ஒரு வரியை திரும்பத் திரும்பப் படித்து அந்த அடியில் புதைந்து கிடக்கும் தத்துவத்தில் மூழ்கி மூழ்கி திளைப்பாள். கண்ணீர் அவள் சிவந்த கன்னங்களில் வழிந்து வழிந்து ஒரு இரத்த வாய்க்காலை வெட்டிவிட்டது.

மனக் கொதிப்புடன் அந்தகாரத்தில் அந்தர்யாமியான கவியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பது கடினமான காரியம். அவன் கற்பனைச் சிறகுடன் எங்கே யெல்லாம் பறக்கிறானோ? எந்த காட்டிலும் முள்ளிலும் மனம் போன போக்கில் திரிகிறானோ? வேதனை காட்டும் பாதையில் எப்படித் தள்ளாடி வழி தடுமாறுகிறானோ? இதை யெல்லாம் அவள் நினைக்கும்போதும் அவளுக்கு எல்லாவற்றிலும் வெறுப்பு தட்டியது. அவன் படும் துன்பங்களை மானஸீகமாக தானே அனுபவிக்க முயன்று வந்தாள்.

அவள் கிருஹபத்தினி அல்ல; சூன்யத்தின் சுழலில் சிக்கிய அபாக்யவதி! அன்பின் ஆதரவை இழந்த அபலை!

அவள் துன்ப யோகினி!

வெள்ளிக்கிழமை வந்தது.

சந்துருவுக்கு முன்னரே வருவதாக உறுதி கூறிவிட்டதால், கொடுத்த வாக்குக்குப்

தானாகவே பங்கம் ஏற்படுத்த அவள் மனம் சம்மதிக்கவில்லை. வெளி உலகினின்றும் தன்னை காத்துக்கொள்ளும் இறுதி முயற்சி.

கொட்டகையில் கூட்டம் அதிகமில்லை. பொறுக்கி எடுத்தாற்போல் ஒரு சிலரே வந்திருந்தார்கள். நடிக நடிகைகளும், பத்திரிகாசிரியர்களும், பிரபலஸ்தர்களுமே அங்கு கூடியிருந்தார்கள்.

சந்துரு அவளை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தும்போது இயந்திரம்போல் எல்லோரிடமும் ஓரிரண்டு வார்த்தைகள் பேசினாளேயொழிய, அவள் உள்ளத்தில் உவகையில்லை. அது தீய்ந்து போயிருந்தது.

படமும் ஆரம்பித்தது.

தன் கண்முன், தான் மகத்தான ஆவலுடன் சித்தரித்த கலைக் கனவுகள் அர்த்த கௌரவம் பெற்று உயிருள்ள நிழல்களாக நெளிவதைக் கண்டு அவளறியாமலே கண்களில் ஜலம் மல்கிற்று. ஏதோ ஒரு அமானுஷ்ய உலகில் சஞ்சரிக்கிறோம் என்ற உணர்ச்சியே அவள் உடல் முழுவதும் ஊசலாடியது. கபாலி மட்டும் அங்கிருந்தால், அவன் உள்ளம் எப்படி பூரிக்கும், புளகாங்கிதமடையும், குதூகலிக்கும் என்று அவள் நினைத்தபோது, அவள் மார்பு பட படத்தது.

“இதழ் கட்டம்” நெங்கிற்று.

ஆம்; அதோ தோன்றும் மகா அழகி அவள்தான். எத்தனை உல்லாசமாக அவள் அங்கே படுத்துக்கொண்டிருக்கிறாள். அவள் மார்பகம் விம்மியது. ஏன்? ப்ரேமையிலா? ஆம். அதோ அங்கே காற்

றில் மிதந்து வரும் தளிர்போல் வருகிருனே அவன் யார்? அவள் காதலன் சந்துருதான். அவள் உடல் எப்படித் துடிக்கிறது, அன்பு வெறியில். எத்தனை ஆர்வத்துடன் தன்னை அவன் அணுகுகிருன். அதோ நெருங்கிவிட்டான்..........என்ன? உண்மையா? அவன் அவளை வாரி எடுத்து எத்தனை வேகத்துடன், எத்தனை கொதிப்புடன், எத்தனை அக்னிதாபத்துடன் அணைக்கிருன் . . . ஆம். அவள் காண்பது பொய்யல்ல, உண்மையின் நிழல் . . . . உயிருள்ள நிழல் . . . . உதடோடு உதடு பின்னிக் கொண்டதை பளிங்குபோல் எடுத்துக்காட்டும் பகிரங்க நிழல்! . . .

அந்தக் காக்ஷி கண்களையே கூசவைத்தது. உடலை குலுக்கியது. வீணையின் தெறிக்கும் நரம்புகள் போல் துடிக்கச் செய்தது.

க்வியை பேயாக மாற்றிய அசாதாரண வேகம், அவளையும் குலுக்கியது.

"ஓ" என்று அலறலாமா என்று நினைத்தாள். ஆனல் வாய் அடைத்து விட்டது. உதடு ஜில்லிட்டுப் போயிற்று.

சரேலென்று எழுந்தாள். வாயு வேகத்தில் கொட்டகையை விட்டு வெளியே வந்தாள்.

தரை ஜில் என்றிருந்தது. காலை எடுத்து ஒரு அடியும் வைக்க முடியவில்லை. கால்கள் தடுமாறின- கண்கள் பதறின. கைகள் உதறின. உள்ளத்தில் ஒரு வெடிப்பு, பார்வையில் ஒரு மறைவு. சிந்தனையில் ஒரு அலங்கோலத் தேக்கம்.

கணவன் சென்ற பாதையில் மனைவி தடுமாறி நின்ருள்.

அவளால் நிற்க முடியவில்லை. வேரற்ற மரம் போல் கீழேசாய்ந்தாள்.

"மஞ்சு" என்று அங்கு அலறி ஓடிவந்த சந்துருவின் வாஞ்சை துடிக்கும் கைகளில் அவள் மூர்ச்சையானாள்.

அவள் பதிவிரதை!

காமராசர் பல்கலை
அவ்வை
தமிழியல்

Printed at Ramanath Press,
10, Woods Road, Madras.
P. I. Card Q. H. No. M.S. 458.
For Pesum Padam, P.I, Card Q.H.No. M.S. 33.



களில் உங்களுக்
வையான சகல
களும் எம்மிடம்
ராஜ
ஹவுஸ்
நவீன்

எங்கள்

# 1946

வருஷத்திய தயாரிப்புகள்

## நக்கீரர்

இசை அரசு

தண்டபாணி தேசிகர்

## பக்த சபரி

மதுரகீதவாணி

வஸந்த கோகிலம்

## விஜயலக்ஷ்மி

(ப்ரகதி கூட்டுத் தயாரிப்பு)

ராஜம்மா .... ராமச்சந்திரன்

பந்துலு கோஷ்டி

## ஸ்டார் கம்பைன்ஸ்

லிமிடெட்

19, வுட்ஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை